பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 08 | செவ்வாய்க்கிழமை | (24.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 249

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



## ஆயுதக் குழுக்களுக்கு ஊக்கம் கொடுத்து யுத்தநிறுத்தத்தை இராணுவம் மீறுகிறது

### சு.ப. தமிழ்ச்செல்வன் க்ண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம்

(கிளிநொச்சி)

'ஆயுதக் குழுக்களின் நடவடிக்கையை இலங்கை இராணுவம் ஆதரிப்பதுடன் ஊக்குவித்தும் வருகிறது' இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியூறு ஹெவ்டேக்கு தமிழ்ச்செல்வன் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: வாகரையில் நடைபெற்ற யுனிசெவ் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு மட்டு - அம்பாறை அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் பாவாவும், மட்டு - அம்பாறை அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்பாளர் யோகாவும் வாழைச்சேனை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர். அம்பாறை அரசியல் பிரிவின் பொறுப்பாளர் குயிலின்பனும், மேலும் இரண்டு பெண் போராளிகளும் கூட மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர். இவர்கள் தமது பெயர்களை பதிவுசெய்திருந்த சோதனைச் சாவடிக்கு சமீபமாக ஒரு சக்தி வாய்ந்த கண்ணிவெடி வெடித்திருந்தது. தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

இருவரும் அவ்விடத்திலேயே மரணம் அடைந்தனர். காயமடைந்தவர்களில் பெண் போராளியும் ஒருவர். குயிலின்பன் காயங்கள் எதுவும் இன்றி தப்பினார். தாக்குதல் நடந்தபின் மூவர் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியதாக குயிலின்பன் தெரிவிக்கிறார். பலியாகியவர்கள் சோதனைச் சாவடியை கடக்கமுன் தாக்குதல்காரர்கள் வேறு ஒரு மோட்டார் சைக்கிளை மறித்து சோதனையிட்டுவிட்டு, அந்நபர் தமது இலக்கு அல்ல எனத் தெரிந்ததும் அவரைச் செல்ல அனுமதித்தனர். பின்னர் புலி உறுப்பினர் தமது பெயர்களை பதிவு செய்துகொண்டு புறப்பட்டதும் 15 மீற்றர் தூரத்தில் கிளைமோரை வெடிக்க வைத்தனர். இந்நிகழ்வானது நெருக்கமாய் அமைந்துள்ள இரண்டு இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கிடை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு நாட்டில் இரு இராணுவம் இரு பொலிஸ் இருக்கமுடியாது

# தவறிழைப்போர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு

# கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரம் வேண்டும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி தெரிவிப்பு

(நமது நிருபர்)

**ஒரு நாட்டினுள் இன்னொரு நாடு இருக்கமுடியாது. அதேபோல் இராணுவமும், பொலிஸும் இருக்கமுடியாது. நீதிமன்றமும் நிர்வாக கட்டமைப்பும் இருக்கமுடியாது. தவறு என்று கண்டறிந்த பின்னர் தவறிழைத்த தரப்பினர் மீது நடவடிக்கைகள் எடுக்க யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு உரிமை இருக்கவேண்டும். இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க வலியுறுத்திக் கூறியுள்ளார்.**

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் பாதுகாப்பு நிலைபரம் தொடர்பாக , ஆராய்வதற்கு வவுனியா சென்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத்தினர் மத்தியில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது ஒரு தரப்பினருக்கு மாத்திரமே நன்மையளிப்பதாக உள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு பிரதேசங்கள் இரு தரப்பினரது ஆதிக்கத்தின் கீழ் இருப்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்
ஆங்கிலம் பகுதி - II
ஆக்கம்:
திருமதி வீ.சிவபாதவிருதயர்
ஆசிரியர்

## கண்காணிப்புக் குழுத் தலைவர் நாளை வன்னிக்குச் செல்கிறார்

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே நாளை வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசவுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், திருகோணமலைத் துறைமுகத்தில் புலிகளின் முகாம்கள் உள்ளதாக கூறப்படும் சர்ச்சைகள் ஆகியன குறித்து தமிழ்ச்செல்வனுடன் ஆராய நேரம் ஒதுக்கித் தருமாறு கண்காணிப்புக் குழுத் தலைவர் விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சூடு சிப்பாய் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காயங்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவப் பொலிஸ் ஒருவர் காயமடைந்தார்.

வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்கொணர்வு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆட்கொணர்வு வழக்குகளில் கொடிகாமம் எருவன் பகுதியில் காணாமற் போயிருந்த வேலுப்பிள்ளை உதயகுமார் என்பவரது வழக்கு யாழ். நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் நேற்று விசா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு - செலவுத் திட்டம் நவ. 10 ல் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தற்போது ஆட்சிப்பீடத்திலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி சி.வி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சில் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான மதிப்பீடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. வரவு - செலவுத்திட்ட இடைவெளியை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் கொடுப்பனவு வருமான எல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர் உதவி வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படும் பெற்றோர்கள் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலர்களின் வருடாந்த வருமான எல்லையை திருத்தியமைப்பது குறித்து கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

5 ஆம் தர புலமைப்பரிசில்தாரர்களில் மாணவர் உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக வருடாந்த வருமான எல்லையை திருத்தியமைத்துள்ள கல்வியமைச்சின் செயலாளரின் எச்.ஆர்.டி / ஈ.கியூ.டி / 2002 / 20 இலக்கத்தையும், 2002-08-15

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலி-தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்டுள்ள உணவகங்கள் நடப்பாண்டு உரிமத்தைப் பெறுக!

## பிரதேசசபைச் செயலாளர் அறிவுறுத்து

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நவாலி, சுதுமலை, மாதகல், சண்டிலிப்பாய், இளவாலை ஆகிய பகுதிகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் இருவாரங்களுக்குள் சகல குறைபாடுகளையும் நிவிர்த்தி செய்து இவ்வருடத்திற்கான உரிமத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவேண்டுமென பிரதேச சபையின் தலைமைச்செயலாளர் பி.விக்டர் அறிவித்துள்ளார்.

மேற்படி பகுதிகளில் உள்ள பேக்கறிகள், உணவகங்களின் உரிமையாளர்கள், குளிர்பானம் மற்றும் யூஸ் உற்பத்தியாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

பொது மக்களின் உணவுசுகாதாரத்தை நிலை நாட்டுவதற்கு சுகாதாரத் திணைக்களத்திற்கும் பிரதேசசபைக்கும் பல அதிகாரங்கள் உள்ளன. இது தொடர்பாக பலவித சட்டமூலங்கள் கூட உள்ளன.

எனவே இவற்றைக் கடுமையாக அமுல்செய்வது என தற்போது தீர்மானிக்கப்படடுள்ளது. இதற்கு முக்கிய காரணம் எமது பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் மற்றும் வயிறறோட்டம், டெங்கு போன்ற தொற்று நோய்களினால் பாதிககப்படுவோரின் தொகை அதிகரித்தமையே ஆகும்.

"அத்துடன், பல இடங்களில் வீதியோரங்களில் ரொட்டிக்கடைகள் அமைத்து பரவலாக ரொட்டி தயாரிக்கப்படுவதுடன் அவை சுகாதாரமறறு இயங்குவதாகவும் எமது பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

எனவே, இது விடயத்தில் நாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமாகின்றது. மற்றும், பல உணவகங்களில் பாதுகாப்பற்ற முறையில் உணவு திறந்துவைக்கப்பட்டிருப்பதால் ஈக்களின் பெருக்கமும் அதிகமாக உள்ளது. எனவே அவற்றைக் கண்ணாடி அலுமாரிகளில் வைத்து மூடிப் பாதுகாப்பது மிகவும் அவசியம்.

மற்றும், யூஸ், ஐஸ்கிறீம் என பவற்றை உற்பத்தி செய்வோர் கொதித்தாறிய நீரை அதற்குப் பயன்படுத்தி சரியானமுறையில் சுட்டுத் துண்டு இட்டு அவற்றை விற்பனை செய்யவேண்டும் இது தொடர்பான சரியான கடடட அமைப்பை ஏற்படுத்தி நடப்பு வருட உரிமத்திற்கான சிபார்சைட் பெற்ற பின்னரே அவற்றை இயக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடல் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி வர்ணநாதன் மற்றும் மானிப்பாய் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உப அலுவலாகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் வருமான மேற்பார்வையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

(ற-252)

# எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோருக்கு உதவ உலக வங்கி முன்வந்துள்ளது

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களுக்கு உதவுவதற்கு உலகவங்கி முன் வந்துள்ளது.

எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளானவர்களுக்கு இலவச மருந்துகளை வழங்கவும் அவர்களின் உடல் உள நலன்களைப் பாதுகாத்து சிகிச்சைஅளிக்கவும் உலக வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 2008 ஆம் ஆண்டுவரை மாத்திரமே உலக வங்கி இந்த உதவியைச் செய்யும் என உலக வங்கியின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுபற்றி சுகாதார அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில்,

உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்களின்படி 750பேர் எச்.ஐ.வி.வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனா. 540பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட இன்னும் பலர் இவ்விரு நோய்த் தாக்கங்களினாலும் பாதிக்கப்பட்ட போதிலும் இதுவரை இனங்காணப்படாமல் இருக்கலாம் எனக்கூறப்படுகின்றது.

எனவே, எச்.ஐ.வி.வைரஸ் தொற்றுக்குள்ளானோர் மற்றும் எயிட்ஸ் நோயாளிகள் எனச் சந்தேகிககப்படுவோர் ஆகியோரின் பெயர் விபரங்களைப் பொதுமக்கள் தமக்குத் தந்துதவ வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

(ற-க,60)

# கனடாவில் பொங்குதமிழ் நிகழ்வை பெரும் எழுச்சியுடன் அனுட்டிக்க ஏற்பாடு

(கனடா)

கனடா நாட்டின் பொங்குதமிழ் நிகழ்வுகள் மிகவும் எழுச்சியுடன் நடைபெற மாணவர் அமைப்புக்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கனடா தமிழ் மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இடம் பெற்றது போன்றே கனேடியத் தமிழர்களின் இருப்பை அடையாளப்படுத்தவும், தயாகத் தமிழ்களுடனான தமது உறவுப் பேணலை வெளிப்படுத்தவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விழா ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் புலம் பெயாந்துவாழும் நாடுகளில் அதிக அளவு தமிழர்கள் வாழும் நாடு கனடா என்பதும், கனேடியத் தமிழர்கள் தமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டிய காலகட்டத்தில் தற்போது இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா, பல்வேறு நாடுகளில் இருந்தும் புலம்பெயர்ந்து சென்ற மக்களை அங்கமாகக் கொண்டதொரு நாடு என்பதும் கனேடியத தமிழர்கள் தமது தொப்புளக்கொடி உறவுகளை தொடர்ந்தும் பேணிக் காத்து தமது இன அடையாளத்தை இழக்காமல் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் சிறப்பம்சமாகும்.

தற்போது சுமார் 3இலடசம் கனேடியத் தமிழ்கள் அங்கு வாழும் நிலையில், தமது இருப்பை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வைச் சகல தமிழர் அமைப்புக்கள் மற்றும் தமிழ் ஊடகங்கள் ஆகியன ஒருமித்த ஆதரவுடன் முனனெடுக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இவ்வாறு செய்வதன் மூலம் காத்திரமான ஒரு சமுதாயமாக ஒரே தலைமையின் கீழ் தம்மைப் பிரகடனப்படுத்துவதுடன், தமக்கும், தாயகத்திற்கும் இடையேயான தொடர்பைப் பேணி, வலுப்படுத்தி தற்போது சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்ததைகளில் காத்திரமான பங்கு வழஙக வேண்டிய கடப்பாடு கனடாவிற்கு உண்டு என்பதைத் தெளிவுபடுத்தவும் இந்த நிகழ்வு பெருமளவில் உதவும்.

அத்துடன், தமிழ்த் தேசியம், தமிழர் தலைமை, தமிழர் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை போனறனவற்றை உள்ளடக்கிய பொஙகு தமிழின் அடிப்படைகளை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தும் நிகழ்வாக இது அமையும் எனவும் நிகழ்வின் ஏறபாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ற-121)

# இடைக்காலத் தன்னாட்சி அலகு குறித்து அரசியல்வாதிகளே முதலில் பரிசீலிக்க வேண்டும்

## சஜித் பிரேமதாச எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றி அரசியல்வாதிகளே முதலில் பரிசீலனை செய்து மதிப்பீடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

இது சரியானது என்று மக்களை நம்பவைப்பதற்கு முன்னர் இவ்வாறு செய்தல் அவசியம் எனத் தெரிவித்தார் அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியொன் றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இதனையே இப்போது செய்து வருகின்றேன். இது தொடர்பில் எடுக்கப்படக்கூடிய நடவடிககைகள் பற்றி மிகவிரைவில் நான் தீர்மானிக்கவுள்ளேன். எமது அரசாங்கத்தில் பேச்சுக்கள் நடைபெற்றன.

ஆனால், அவை தொடர்பான பிரதான தரப்பினரின் உடன்பாடுகள் பற்றி எந்தவொரு ஆவணமும் இதுவரை எமக்குக் கிடைத்திருக்கவில்லை. நாம் எமது கட்சி விதிகளுக்குக் கட்டுப்பட்டவாகளாயினும், எமக்கென்றும் சில அபிப்பிராயங்கள் உள்ளன.

ஜே.வி.பி.எல்லாவற்றையும் குழப்பியடித்துக்கொண்டு நிற்கிறது. சுலோகங்கள், பத்திரிகை அறிக்கைகள், ஊடகவியலாளர் மாநாடுகள் என்பனவற்றின் மூலம் தமது பலத்தை முன்வைத்தபடியுள்ளனர்.

ஆனால் தம்மை முற்றிலும் திறமையற்றவர்கள், தகுதியற்றவர்கள் நல்லாட்சிக்கு இலாயக்கற்றவர்கள் என்பதை மென்மேலும் இவர்கள் தமது செயற்பாடுகள் மூலம் நிருபித்து வருகிறார்கள்.

இன்று ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி.க்குமிடையில் உள்ள கொள்கை முரண்பாடுகள் குறித்து தீமான மெடுக்கும் உயர்பீடத்தில் இசைவான போக்கில்லை என்பதையே இச் செயற்பாடுகள் காட்டுகிறது. இந்நிலைமை நாட்டின் வளர்ச்சிக்கான கொளகைகள், நடைமுறைகள் என்பனவற்றை எவ்வாறு பாதிக்கப்போகிறது எனபது கவனிக்கத்தக்கதாகும் இது தேசிய நலனுக்கானது அல்ல. தனிப்பட்டவர்களின் நலன்களைப் பாதுகாப்பதாகவே இருக்கின்றன எனக் குறிப்பிட்டார்.

(ற-6)


**கட்டைவேலி — நெல்லியடி ப.நோ.கூ.சங்கமும் அதன் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றமும் இணைந்த 82ஆவது அனைத்துலகக் கூட்டுறவு தினவிழா**

இடம்:- நெல்லை முருகன் திருமண மண்டபம்

காலம்:- 25,26.08.2004 புதன், வியாழன் இருதினங்கள் தினம் காலை 9.30தொடக்கம் 1.30வரை.

*பிரதம விருந்தினர்கள்*

25.08.2004 - திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்கள். தலைவர், யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசம.

26.08.2004 - திரு.க.கனகரத்தினம் அவர்கள். யாழ்.மாவட்ட உதவிச் செயலர்.

நிகழ்ச்சிகள்


1. தலைமையுரை - சங்கத்தலைவர்
2. விருந்தினர் உரை
3. புலமைப்பரிசில் வழங்கல் 2003ஆம் ஆண்டு, 5ஆம் ஆண்டு, க.பொ.த.பரீட்சை (சா), க.பொ.த.பரீட்சை (உ)
4. போட்டிகளில் தெரிவானோர் பரிசு பெறல்.
5. ஊக்குவிப்பு வழங்கப்படுவோர். கூட்டுறவுப் பணியாளர், நூல்நிலைய வாசகர், வைப்புக்கெதிரான கொள்வனவு, கடன் மீளளிப்பு கூட்டுறவின் மூத்த உறுப்பினர்.
6. கலைநிகழ்ச்சிகள் தனி நடனம், குழு நடனம், இசை நிகழ்வுகள், நாடகங்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22.08.2004 கரவெட்டி.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

(C/423)

இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் பெண்கள் தமது மன எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் பெண்கள் பண்பாட்டு மையத்தில்இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.

படம்:-அலுவலக நிருபர்

நல்லூரான் திருவடிக்கு



நான்காம் திருவிழா

## ஆறுமுகன் நல்லூரை ஆள்கிறான்

வாசம லரெடுத்து வண்ணமா லைதொடுத்து
பேசவினியகுகன் பெருமார்பில் தானணிந்து
தேசம்புகழ் நல்லையை தித்திக்கப் பண்ணிசைத்து
பாசவினை போக்கிடவே பகலிரவாய் பணிந்திடுவோம்

விண்கொண்ட மேகங்கள் இடிமுரசா யொலித்துநிற்க
கணகொண்ட இடமெல்லாம் அடியாரிசை தானொலிக்க
பண்பாடும் வண்டினங்கள் தாமரம்பஞ்சரம் காந்தாரம்பாட
மண்கொண்ட மாட்சிதனை நல்லூரில் கண்டிடலாம்

தொண்டர் குழாங்களோ குமரன்பணி செய்து நிற்க
பண்ணிசை வித்தகர்கள் பாடல் வண்ணம் தானிசைக்க
விண்ணவரும் வாழ்த்திசைக்க வேதியரும் வேதமோத
அண்ணலாம் ஆறு முகவன் நல்லூரை ஆள்கின்றான்

எஸ்.சிவானந்தராஜா

## அலங்காரக் கந்தனே!

சரவண பவ எனும் மந்திரமே
சங்கிலி மன்னனின் குல தெய்வமே!
வேடர் குல வள்ளியின் துணைவனே
வேலவனே வினைதனை தீப்பவனே!
அலங்கார கந்தனாக வீற்றிருந்துமே
அகிலமெலாம் உன்புகழ் ஒலிப்பதுமே!
தொல்லை யெல்லாம் தொலைப்பவனே
தொழும் அடியார் குறைகள் தீர்ப்பவனே!
எல்லையில்லா இன்பம் தருவதுமே
எம்மடியார் துயரினை தீர்ப்பதுமே!
ஆறுமுகனே அம்பிகை பாலனே
ஆறுதல் அளிக்கும் எம்பெருமானே!

கு.உமாமகேஷ்வரன்
(சட்டத்தரணி) கல்ஸ்ரொப்
கொழும்பு-12

## திருப்பேறும் அருட்பேறும் பெறுவோம்

பேரானே! பிரணவஞ்சொல் பேரூரானே!
படியினர்மேல் அன்புமற வாதகோனே
நேரான தந்தையும் தாயும் நீயே
நெறியாளர் எத்தனையோ எல்லாம் நீயே
தீராத தொன்றுமிலைக் கடைக்கண் பார்த்தால்
திருபபேறும் அருட்பேறும் பெறுவோம் நாங்கள்
சீரான தமிழ்ப் பாவால் பாடி நின்றேன்
நல்லூரில் அமர்கின்ற கருணைவேந்தே!

கவிமணி கந்த முருகேசதாசனார்.

## அருள் தாராய்!

நல்லையம்பதி உறையும் எழில் வேல் முருகா
வல்ல கணபதியின் உடன் பிறந்த சோதரா
அல்லல் தனைக் களைந்து ஆனந்தம் பெருக்கிடவே
எல்லா அருளும் தாராய் உமையாள் மைந்தா

பிரம்ம சாத்வி.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பில்

# ஜே.வி.பி.யின் செயற்பாடுகளைக் கண்டிக்கிறார் அமைச்சர் ஜயரட்ண

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பில் கட்சியின் உயர்பீடத்தினருடன் கலந்துரையாடாமல் பொதுக் கூட்டங்களில் ஜே.வி. பியினரைப் பற்றி முறை கேடாக பேசியிருக்கிறார் தகவல் தொடர்பாடல் அமைச்சர் டி.எம். ஜயரட்ண.

இடைககால நிாவாகம் தொடர்பில ஜே.வி.பியின் விமல் வீரவன்ச தெரிவித்த கூற்றுக்களால் கோபமடைந்த டி.எம். ஜயரட்ண ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான நிலைப்பாட்டிலிருந்து ஜே.வி.பியினர் முரண்படுகிறார்கள். முக்கியமாக அவாகளுக்கு ஒழுக்கம் பற்றித் தெரியவில்லை.

சகல அங்கத்துவக் கட்சிகளும் ஒன்றாக ஒரு உடன் படிக்கையில், கைச்சாத்திட்ட போதும் அதனை எல்லாக் கட்சிகளும் மதித்து நடக்கவேண்டும்.

ஜே.வி.பி.யினர் இதனை சுயாதீனமாகக் கையாளுகின்றனர். பொறுப்பற்ற முறையில் இவர்கள் நடந்து கொள்கின்றனர்.

ஒரு பாடசாலையில் கற்பிப்பது போன்று அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். இது பற்றி அவர்கள் உணரவேண்டும். ஏனைய அங்கத்தவர்களைப் பார்த்துப்புரிந்து கொள்ள வேண்டும்.

அக்காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் நான் கடுமையாக ஒழுக்கவிதிகளை நடைமுறைப்படுத்தினேன். அப்போது பொது ஜனஜக்கிய முன்னணிக்குள் ஒரு ஒழுக்கக் கேடுகளும் இடம்பெறவில்லை. ஆனால தற்போது எனது கையைக் கட்டிவட்டார்கள் எனத் தெரிவித்தார். (ற-6)

## கிராம அலுவலர் தாக்கப்பட்டார்

(புத்தளம்)

புத்தளம் தில்லையடி கிராம அலுவலா அப்துல் ரஸத் ஆயுதக் கும்பல் ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கடமை நிமித்தம் சென்று கொண்டிருந்தபோது ஹண்டர் வாகமொனறில் வந்த 5 பேர் அடங்கிய கும்பல் ஒன்றே அவரைத் தாககியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த கிராம அலுவலர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களைத் தாம் கைது செய்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-15)

## சங்காபிஷேகம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை உளைக்கை பளைச்சி வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கு பூஜையுடன் ஆரம்பமாகி 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.

(ற-க,49)

## ஜனவரி முதல் இலங்கையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பத்திரிகைகள் விற்பனை

(கொழும்பு)

கனடாவில் இருந்து செயற்படும் நிறுவனம் ஒன்று சர்வதேச அங்கீகாரம் பெற்ற செய்திப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் இலங்கையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளதாக நிறுவனததின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் நலன் கருதியும் சுற்றுலா மற்றும் முதலீடுகள் என்பனவற்றை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடனேயே இததகைய முடிவு ஒன்றை தமது நிறுவனம் எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-க)

## விபத்தினால் முறுகல் நிலை

(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் பொதுவான ஒருவரது உந்துருளி மீது இராணுவ ஊர்தி ஒன்று மோதியதில் அப்பகுதியில் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில முறுகல் நிலை ஏற்பட்டது.

மேற்படி விபத்துச் சம்பவத்தை அடுத்து அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற இராணுவ ஊர்தியை மக்கள் தடுத்து நிறுத்தியதினாலேயே இம் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, சேதமுற்ற உந்துருளியை திருத்தம் செய்து தருவதாக இராணுவத்தினர் உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

(ற-ப)



புன்னாலைக்கட்டுவன் ஆ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலை அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.
இதனை அமைத்த ஓவிய கேசரி செ. வரதராஜனுக்கு கௌரவிப்பு வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



முன்னாள் சுங்கத்திணைக்கள ஆணையாளர் கே.கே. சுப்பிரமணியம் தம்பதியரின் பவளவிழா மலர் அண்மையில தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனத்தில் ஆதீன தம்பிரான சுவாமிகள் முன்னிலையில் வெளியிடப்பட்டபோது பேராசிரியர் செல்வகணபதியும் அருகில் இருப்பதைப் படத்தில் காண்க.

## விவாத அரங்கு -5

விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது, பாதுகாக்கின்றது-

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி
அனுப்பவேண்டிய முகவரி அனுப்பிவையுங்கள
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# பரிவு

''இன்றைக்கு உலகத்தில் இருக்கக் கூடிய பல வகையான துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் என்னவென்று தெரியுமா சார்?'' என்று கேட்டார் ஒருவர். '' என்ன?'' என்று கேட்டேன் '' ஒரு மனிதன் மீது இன்னொரு மனிதனுக்கு இருக்க வேணடிய பரிவு இல்லாமல் போய்விட்டது சார். அதுதான் துன்பத்திற்குக் காரணம். பணத்தினால் கிடைக்காத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைத்து விடுகிறது'' என்றார். அதற்கு டால்ஸ்டாயின வாழ்க்கையல் நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகச் சொன்னார்.

ஒரு சமயம் டால்ஸ்டாய் மொஸ்கோ நகரத்தின் 24வது சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தாராம். அப்போது ஒரு பிச்சைக்காரன் அவருககு எதிரில் வந்தான். ''ஐயா பிச்சை போடுங்கள்'' என்றான். டால்ஸ்டாய் இளகிய மனதுடையவர். பரிவு நிறைந்த உள்ளம் அவருக்கு.

உடனே அந்தப் பிச்சைக்காரனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். தனது சட்டைப் பொக்கெற்றினுள் கைவிட்டார். அதில் ஒரு காசு கூட இல்லை. உடனே அந்தப் பிச்சைககாரனைப் பார்த்து ''தம்பி கையில் பணம் இல்லையே'' என்றார்.

இதைக்கேட்டதும் பசியால் வாடிப்போயிருந்த அந்தப் பிச்சைக்காரனின் முகத்தில் ஒரு மலர்ச்சி ''ஐயா..: நீங்கள் பிச்சை போடாவிட்டாலும் பரவாயில்லை இப்போது எனது மனம் நிறைந்துள்ளது. மகிழ்ச்சியாகவும் இருக்கிறது'' என்றான். டால்ஸ்டாய் ஆச்சரியமாக அவனது முகத்தைப் பார்த்தார். அவன் சொன்னான் ''ஐயா... நீங்கள் பிச்சை கொடுப்பதை விட ஒரு பெரிய உதவியை நீங்கள் இனறு எனக்குச் செய்துவிட்டீர்கள். அதாவது என்னை தம்பி என்று கூப்பிட்டீர்களே அதுபோதும் '' என்றான் அவன்.

தன்னைச் சிறிதும் மதிக்காத இந்த உலகத்தில் தன்னையும் ஒரு மனிதனாக மதித்து தம்பி என்று உறவுகொண்டாடிய டால்ஸ்டாய் மீது அந்தப பிச்சைக்காரனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டது. கேவலம் பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைத்துவிடும் எனபதற்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல உதாரணம்.

இந்த பரிவு மனிதனிடம் இன்று மிகவும் குறைந்து போய்விட்டது. அதனால்தான் துன்பபபடுகிறான. டால்ஸ் டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் வர வேணடும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? தினமும் சிறிது நேரமாவது நம்மைப் பற்றிய சிந்தனையிலிருந்து விடுவித்துக் கொண்டு மற்றவாகளுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப்பார்க்க முயற்சி செயயவேண்டும். பலரும் அப்படிப் பார்த்திருக்கிறார்கள்.

அல்பேர்ட் ஷ்வைட்ஸர் அமெரிக்காவிற்குப் போயருந்தார். அப்போதும் அவரிடம் படித்த மாணவர் ஒருவர் அவரைச் சந்தித்தார். என்னுடன் உணவு வடுதர்க்கு வரவேண்டும் என்று மிகவும் பணிவாகக் கூப்பிட்டார். இவரும் சரி என்று கூறி அவருடன் போனாா. அங்கே அழைத்துக்கொண்டு போய் உட்காரவைத்தார். அங்கே ஷ்வைட்ஸருக்காக ஒரு ஸ்பெஷல்கேக் வரவழைக்கப்பட்டிருந்தது. கேக்கை வெட்டு முன் ஷ்வைட்ஸர் அங்கே அந்த அறையில் உளளோர் எத்தனை பேர் என்று எண்ணிப் பார்த்தார். 9பேர் இருந்தனர். இவர் 10துண்டுகள் வெட்டினார்.

9 பேர்தானே இருக்கிறோம் 10 துண்டுகள் எதற்காக? என்று எல்லோரும் யோசித்தனர். அப்போது இவர் சொன்னார் மிகவும் பிரியமாக இந்த கேக்கை இங்கே கொண்டுவந்து வைத்த பணிப் பெண்ணுக்கு 10வது துண்டு என்றார். இது தான் பரிவு. மனிதன் மனிதனுக்குக் காட்ட வேண்டிய பரிவு. இப்போதெல்லாம் ஒரு மனிதன இன்னொரு மனிதனை எப்படி எடைபோடுகிறான் தெரியுமா?

ஒரு ரயில் நிலையத்திற்கு ஒருவன் வந்தான் அங்கே நின்ற ஒருவரைப்பார்த்து '' உங் களுக்கு மதுப்பழக்கம் உண்டா சார்?'' என்று கேட்டான். இவர் ''சுததமாகக் கிடையாது சார்'' என்றார். ''சரி... அப்படியென்றால் இந்த மதுப் போத்தலை சிறிது நேரம் வைத்துக்கொள்ளுங் கள் நான் போய் டிக்கெற வாங்கி வருகிறேன்'' என்று கொடுத்து விட்டு மிக்க நம்பிக்கையுடன் நடந்து போனான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## இந்திய அகதி முகாமிலிருந்து வந்து
# தீவகத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை
## பட்டினிச் சாவை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்து கடந்த சில மாதங்களாக தீவகப்பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணப்பொருட்கள் வழங்கப்படாமையால் அந்தக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

சட்டவிரோதமாகப் படகுகள் மூலமும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடனும் மீளக் குடியமரும் இந்தக் குடும்பங்கள் தமது நாளாந்த உணவுத் தேவைகளுக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றன.

தற்போது தீவகப் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான கடந்த மாசி மாதத்திற்கான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதுடன் பங்குனி மாதத்திற்கான நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இந்தியாவில் இருந்து வந்து தீவகத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதறகான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் இந்த மக்கள் பெரும் கஷடங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பன எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ந-121)

## மன்னார் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு
# உயிலங்குளம் ஊடாக கோதுமை மா எடுத்துச்செல்லப்படும்

(மன்னார்)

மன்னாரிலுள்ள இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசங்களுக்கான கோதுமை மா உட்பட ஏனைய அத்தியாவசிய உணவுப்பொருட்கள் உயிலஙகுளம் பாதையூடாக எடுத்துச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவீத்துள்ளார்.

மன்னார் இராணுவக்கட்டுப்பாட்டு மடுவீதியூடாக இவ்வுணவுப்பொருட்களை எடுத்துச்செல்வதற்கு இராணுவம் தடைசெய்ததை அடுத்தே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வருங்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெறறு மடு வதியூடாக இவ் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

இதனால் வீண் காலதாமதம் தவிர்க்கப்படும் என்றும் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (ப

## இராசி பலன்

24.08.2004 *(ஆவணி 08, செவ்வாய்க்கிழமை )*
நவமி மு.இ 10.04 மணிவரை
அனுசம் காலை 7.11 மணிவரை
கேட்டை பி.இ 5.35 வரை
இராகுகாலம் 3.05 - 4.-35 மணிவரை
சுபநேரம் 10.35 - 12.05 மணிவரை

**மேடம்**
அமைதிக் குறைவு, பிரயாண பயம், எதிர்பாராத மனஸ்தாபம், முயற்சி தாமதம்.

**இடபம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ சிந்தை, தொழில் வருமானம், உறவினர் சந்திப்பு.

**மிதுனம்**
மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், தேகநலன், சத்துருஜெயம்.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், புத்திரரால் கவலை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், பணவிரயம்

**சிங்கம்**
உஷ்ண வியாதி, காரிய தாமதம், வாக்கு மேன்மை, மனப்பயம்.

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, பிரயாண நன்மை, தொழில் நன்மை, கர்த்தி.

**துலாம்**
நண்பர்கள் விரோதம், சுரவியாதி, தனவிரயம், பிரயாணம்.

**விருச்சிகம்**
ஆழ்ந்த சிந்தை, எதிர்பாராத நன்மை, நல்ல முயற்சி, புதிய விடயம்.

**தனுசு**
அபகர்த்தி, பித்த ரோகம், முயற்சி தாமதம், பணவிரயம்.

**மகரம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், சகோதரர் வழி உதவி, நல்ல வருமானம், போசன சுகம்.

**கும்பம்**
நிலைமாற்றம், அதிகபிரயாசை, பிறருக்கு உதவுதல், காரிய அனுகூலம்.

**மீனம்**
சத்துரு ஜெயம், கட்டுப்பாடு, பிதாசிந்தை, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# பாவாவின் இழப்பு தமிழருக்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்திற்கும் பேரிழப்பே
## அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் செயலர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா கொலைசெய்யப்பட்டமை குறித்து அம்பாறை மாவட்டப் பள்ளிவாசல்களின் செயலர் ஜி.எம். இப்ராஹிம் அனுதாபம் வெளியிட்டுள்ளார்.

பாவா தமிழ் மக்களுக்காக மட்டுமல்லாமல் முஸ்லிம் மக்களுக்காகவும் பணியாற்றியவராவார்.

அவர் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் உறவுகள் பாரதூரமான விதத்தில் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் அதனை உரிய முறையில் கையாண்டு பெரும் பதற்ற நிலைமைகளைத் தவிர்க்கச் செய்தவர் என அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் செயலர் ஜி.எம்.இப்ராஹிம் நினைவு கூர்ந்துள்ளார்.

வட்டமடு காணிப்பிரச்சினை மற்றும் பொத்துவில் காணிப்பிரச்சினை போன்றவற்றில் ஒவ்வொரு காணிக்கும் விஜயம் செய்து இரண்டு சமூகங்களுக்கும் இடையிலும் நல்லுறவைப்பேண பாவா வழிவகுத்தார்.

எனவே பாவாவின் இழப்பானது தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கும் பேரிழப்பாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-121)

# தமிழ் இலக்கியப் பெருவிழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வரும் தமிழ் இலக்கியப் பெருவிழா இம்முறை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8,9,10ஆந் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதில் ஈழத்துத் தமிழ் இலக்கிய அறிவியல் துறை நூல்களின் விற்பனையும், கண்காட்சியும் இடம்பெறவிருக்கிறது. எனவே, 1990ஆம் ஆண்டுக்குப் பின்பாக வெளியிடப்பட்ட தத்தம் நூல்களை நூலாசிரியர்கள் 10 பிரதிகள் வீதம் தி.செல்வமனோகரன, ('தூண்டி' இலக்கிய அமைப்பு) 141 கேணியடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நூல்கள் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் விற்பனையாளருக்கான கழிவு தவிர்ந்த விற்பனைப் பணம் அந்தந்த நூலாசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இது விடயம் குறித்த மேலதிக விபரங்களை 021-2226416 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார். (ந-5)

# நோயாளர் சிரமம்

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் கடமையாற்றும் ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர்களின் மட்டுப்படுத்தப்பட்டசேவை காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ந-க)

# சித்த மருத்துவத்தின் அருமருந்துகளில்

# ஒன்று - பிணி தீர்க்கும் திப்பிலி

இது மலை அடிவாரங்களில் சாதாரணமாய் வளரும். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மிகுதியாய்க் கிடைக்கும், கிழக்கு



வங்காளம், நேபாளம், அஸாம் முதலிய இடங்களிலும் பயிராக் கப்படுகின்றது. திப்பிலியில் பல உண்டு என்றாலும், குணங்களில் பொதுவாக எல்லாம் ஒன்றாகவே தோன்றும், பலநோய்களுக்கு கை கண்ட மருந்தான இது சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் அருமருந்தாகும்.

### தீரும் நோய்கள்

இருமல், காசம், பொருமல், வாய்வு, குன்மம், தொண்டைக்கம் மல், குத்துளச்சல், சயம், ஜுரம், ஜன்னி, பவுத்திரம், ஈரல் நோய், அஜீரணம், வயிற்றுவலி, சீதளம், விக்கல், தலைவலி, மலச்சிக்கல், தேமல, குழந்தைகள் நோய், நெஞ்சு நோய், கோழை, வாந்தி, குடல்வாதம், இரத்த வாந்தி, கண் நோய் மற்றும் எண்ணற்ற நோய்கள் நீங்கும்.

அரிசித் திப்பிலி 35 கிராம், மிளகு 35 கிராம், சுக்கு 35 கிராம், சீரகம் 20 கிராம், இலவங்கம் 20 கிராம், ஏலம் 20 கிராம், இவை அனைத்தையும் உரல் (அல்லது) அம்மியில் வைத்து இடித்து, இடித்ததை எடுத்துப் பொடித்துச் சலித்து வைத்துக் கொண்டு, பிறகு 175 கிராம் பனை வெல்லத்தை எடுத்துப் பாகுபோல் காய்ச்சி, பதம் வரும்போது மேற்கண்ட சலித்து வைத்த தூளைக்கொட்டி நன்கு கிளறிவிட்டு, பின் கால்கிலோ நெய்விட்டுச் சேர்த்து நன்றாகக் கலந்து சேமித்து வைத்துக் கொண்டு, தேவையானபோது நெல்லிக்காய் அளவு எடுத்து சாப் பிடவும். இவ்விதமாக தினம், காலை-மாலை 5 நாள் சாப்பிட அஜீரணம் நீங்கும், பசி எடுக்கும், வாந்தி நிற்கும்; அக்கினி மாந்தம், வெட்டைசூடு இவை நிவிர்த்தியாகும்.

உத்தேச அளவில் சுக்கு, மிளகு அரிசித் திப்பிலி இம்மூன்றையும் சம அளவு எடுத்து அம்மியில் வைத்து இடித்து தூள் செய்து கொள்ளவும் இத் தூளைச் சிறிதளவு எடுத்து வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும், நாளடைவல் மாந்தத் தால் ஏற்பட்ட பேதி நின்று குணமாகும்.

**குறிப்பு:** பேதி நிறக 2 அல்லது 3 நாட்கள் சாப்பிடவும்.

திப்பிலி, ஏலம், அதிமதுரம், சீரகம், சந்தனம், மிளகு, சுக்கு, இஞ்சி இவை அனைத்தையும் தேவையான அளவு அம்மியில் வைத்து இடித்து, இடித்ததை ஒரு மண்பாண்டத்தில் போட்டு, சுமார் ஒரு படி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி எடுத்து சர்க்கரை கலந்து அருந்திவரும் பட்சத்தில் நாளடைவில் பித்தம் நீங்கும்.

தேவையான திருப்பிலி எடுத்து அம்மியில் வைத்து இடித்து, இடிதத தூளை ஒரு மெல்லிய துணி யில் போட்டுச் சேமித்து வைத்து தேவையான போது கொஞ்சம் எடுத்துத் தேன் விட்டுக் குழைத்து சாப்பிட இருமல் ஈளை, கபம், வாய்வு இவைகள் அனைத்தும் நீங்கி ஜீரண சக்தியும் உண்டாகும்.

### வாந்தி நிற்பதற்கு

திப்பிலி, கலைமான் கொம்பு, அதிவிடயம் இவை மூன்றையும் உத்தேச அளவில் சமமாக எடுத்து, உரலில் போட்டு இடித்து, இடித்த தூளை எடுத்து ஒரு மெல்லிய துணியில் கொட்டி, வடிகட்டி ஒரு போத்தலில் போட்டு வைத்து தேவையானபோது 4 கிராம் அளவு எடுத்துத் தேனில் குழைத்து சாப் பிட வாந்தி நிற்கும்.

திப்பிலி 12 கிராம், மிளகு 12 கிராம், சுக்கு 12 கிராம், கொத்த

## மருத்துவ விளக்கம்

மல்லி 12 கிராம், பேரமுட்டி 12 கிராம் ஆகிய அனைத்தையும் எடுத்து அம்மியில் வைத்து இடித்து, இடித்ததை ஒரு மண் பாண்டத்தில் போட்டு அரைப்படி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துச் சுண்டக்காய்ச்சி அரைக்கால் படியாக வற்றவைத்து இறக்கி ஒரு நாளைக்கு 3 வேளை அருந்த நாளடைவில சுளுக்கு ஜுரம் நீங்கி விடும்.

**குறிப்பு:** அரைப்படி தண்ணீரை நன்கு சுண்டக்காய்ச்சி 8 இல் 1 பங்காகச் செய்து இறக்கவும்.

### தாந்திரிக ஜன்னிக்கு

உத்தேச மதிப்பில், திப்பிலி, முத்தக்காசு, பேய்ப்புடல், சுக்கு, சீரகம், தனியா, வில்வ வேர், கொட்டைக் கரந்தை, சீந்தில் இவை அனைத் தையும் அம்மியில் வைத்து இடித்து, இடித்த தூளை ஒரு மண்பாண்டத் தில் போட்டு, அதற்குத் தகுந்த தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து நன்கு காய்ச்சிய கஷாயத்தை இறககி அருந்தக் கொடுக்கவும். நாளடைவில மேற்படி ஜன்னி நீங்கி நலம் பெறும்.

திப்பிலிச் சூரணமும், குப்பை மேனிச சூரணமும் சமமாய்க் கலந்து 4 கிராம் அளவு எடுத்து நெய்யில் கலநது சாப்பிட நாளடைவில் பவுத் திரம் நீங்கும்.

திப்பிலி, வெந்தயம், நெற்பொரி, நெல்லிப் பருப்பு, சிற்றரத்தை இவை களை ஓர் உத்தேச அளவில் நிறை யாக எடுத்து அம்மியில் வைத்து இடிதது, இடித்த தூளை ஒரு போத் தலில் சேமித்து வைத்து, தேவை யான போது இத்தூளை 3 கிராம் அளவுடன் சர்க்கரை கலந்து கொஞ்சம் நெய் ஊற்றி விரலினால் கலக்கி சாப்பிட்டுவரத் தீரும்.

### வாந்தி அடங்க

தேவையான திப்பிலி, நெல்லி வற்றல், நெற்பொரி, சீரகம் ஆகிய நான்கையும் அம்மியில் வைத்து இடித்து, இடித்த பொடியை ஒரு மண்பாண்டத்தில் போட்டு அதற் குத் தகுந்த தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சிய கஷாயத்தை இறக்கி வடிகட்டி அருந்தவும் வாந்தி அடங்கும்.

**குறிப்பு:** வாந்தி அடங்கவில்லை என்றால் மறுபடியும் அருந்தவும். தேவையான திப்பிலியும், கரந்தை யும் எடுத்து அம்மியில் வைத்து அரைத்து, அரைத்ததை எடுத்துச் சுக்கு கஷாயத்தில் போட்டு அருந்த நாளடைவில் எிகுன்மமானது நீங்கும்.

**குறிப்பு:** வறுத்த உப்பு, சுட்ட புளி சேர்க்கவும். இம் முறையானது கருவுற்ற பெண்களுக்கு மிக முக் கியமானது.

### தலைவலி, கபநோய், காய்ச்சல் அஜீரணம், மேகக் கட்டி இவைநீங்க:

தேவையான திப்பிலியும் சுக்கும எடுத்து அம்மியில் வைத்து இடித்து, இடித்த தூளை ஒரு மெல்லிய துணியில் கொட்டி வடி கட்டி, அத்தூள் அதிகமாக இருக் கும் பட்சததில் போத்தலில் வைக்க வும். தேவையான போது எடுத்து 3 கிராம் அளவு வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும், மேற்கண்ட நோய்கள் விலகி அஜீரணத்தை அகற்றிப் பசியைத் தோற்றுவிக்கும்.

### மலச்சிக்கல்

அரிசித் திப்பில், சூரத்து நிலா விரை, சுக்கு, சீரகம் இவைகளை நம் உத்தேச அளவில் எடுத்து அம்மி யில் வைத்து இடித்து, இடித்த தூளை ஒரு தேக்கரண்டி எடுத்து ஒரு குவளையில் தண்ணீர் எடுத்து, அத்தூளைப் போட்டுக் காய்ச்சி வடிகட்டி காலையில் மாத்திரம் அருந்தி வரவும். நாளடைவில் மலச்சிக்கல் நீங்கி குணம் ஆகும்.

அரிசித் திப்பிலி 35கிராம், கடுகு 35 கிராம், சுக்கு 35கிராம், காரெள்ளு 35 கிராம், இவைகலை உரல் (அ) அம்மியில் போட்டு இடித்து, இடித்து சூரணத்தை ஒரு மெல்லிய துணியில் கொட்டி வடி கட்டி அச்சூரணத்தைச் சேமித்து வைத்துக்கொண்டு தேவையான போது இச் சூரணத்தை சுமார் 3 அல்லது 4 கிராம் அளவு எடுத்து வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வெந்நீர் அருந்தவும்.

உபயோகம்: காலை-மாலை 5 நாள் அருந்தவும்.

தேவையான இந்துப்புவும், அரிசித் திப்பிலியும் அம்மியில் வைத்து இடித்து, இடித்த சூர ணத்தை -அதாவது இத்தூளைத் தேன் விட்டு மத்தித்து சாப்பிட நாளடைவில் நிற்கும்.

மருத்துவமேதை
டாக்டர்
ஏ.ஆர்.என்.துரைராஜ்

### தேமல் மறைய எளிய முறை

தேவையான அரிசித் திப்பிலி யை எடுத்து அம்மியில் வைத்து நன்கு தூள் செய்து, இத்தூளில் இரண்டு சிட்டிகை எடுத்து இத னுடன் தேன் சேர்த்து தொடர்ந்து உள்ளுக்கு சாப்பிட்டு வர ஒரு மாதத்தில் தேமல் மறைந்துவிடும் பிறகு வராது.

நம் உத்தேச அளவில் அரிசித் திப்பிலி, சுக்கு, மிளகு இம் மூன் றையும் சம அளவு எடுத்து அம் மியில் வைத்து இடித்து, இடித்த தூள் அரைத்தேக்கரண்டி அளவு எடுத்துத் தேனில் குழைத்து சாப் பிட சீதளம் நீங்கும்.

மேற்படி தூளை அரைத் தேக் கரண்டி அளவு எடுத்துச் சிறிது பனை வெல்லம் கலந்து சாப்பிட நாளடைவில் வயிற்று வலி நீங்கும்.□

# பொலிஸ் நிலையத்தை பொதுமக்கள் முற்றுகை

(செங்கல்பட்டு)

திருப்போரூர் தொகுதி அ.தி. மு.க. சட்டமன்ற உறுப்பினர் கனிதா சம்பத்தின் கார் எரிக்கப்பட்டது தொடர்பாக அப்பாவிகளைப் பொலிஸார் பிடித்துச் சென்றிருப்ப தாகக் கூறிச் செங்கல்பட்டு பொலிஸ் நிலையத்தைப் பொதுமக்கள் நேற்றுமுன் தினம் முற்றுகை யிட்டனர்.

செங்கல்பட்டு நகராட்சிக் கவுன் ஸிலரான கோடீஸ்வரன் என்பவர் சில தினஙகளுக்கு முன்பு கொலை செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக எம்.எல்.ஏ.கனிதா சம்பத்தின் காரை மர்மநபர்கள் சிலர் செங்கல்பட்டு நத்தம பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு தீ வைத்து எரித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நத்தம் பகுதியைச் சேர்ந்த சில ரைப் பொலிஸார் பிடித்துச் சென்றி ருப்பதாகக் கூறி அப்பகுதி மக்கள் செங்கல்பட்டு காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

கோடீஸ்வரன் கொலைக்குக் காரணமானவர்களைப் பிடிக்காமல் கார் எரிப்புக்கு மட்டும் பொலிஸார் முக்கியத்துவம் அளிப்பதாக அவர்கள் கூறினர். அப்போது சிலர் கவுன்ஸிலர் கோடீஸ்வரன் கொலை தொடர்பாக எம்.எல்.ஏ. கனிதா சம்பத்தை விசாரிக்கவேண்டும் என்றனர். (து)

# மாணவன் கழுத்தை அறுத்த கொள்ளையர்கள்

(மதுரை)

மதுரையை அடுத்த உச்சிலம் பட்டியில் பள்ளி மாணவன் ஒரு வனின் கழுத்தை வெட்டிக் கொன்று விட்டு மர்மநபர்கள் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார் கள்.

நேற்றுமுன்தினம் இரவு உச்சி லம்பட்டியிலுள்ள சிவா என்ற பள்ளிமாணவன் வீட்டுக்குள் கதவை உடைத்துக் கொண்டு புகுந்த கொள்ளையர்களை அம் மாணவன் தடுக்க முயன்றிருக்கி றான். இதனால் ஆத்திரமடைந்த மர்ம நபர்கள் சிவாவின் கழுத்தை அரிவாளால் அறுத்துக் கொலை செய்தார்கள்.

பின்னர் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர் களை மிரட்டி அலுமாரியை உடைத்து ஒன்றரை இலட்சம் ரூபா மற்றும் பொருட்களை அள்ளிக் கொண்டு தப்பிச் சென்று விட்டார்கள். (து)

# இந்தியச் செய்திகள்

## ஊராட்சித் தலைவர் கோரக் கொலை

திருவாரூரை அடுத்த பொள் ளாச்சி ஊராட்சித் தலைவர் கோபி சம்பத் என்பவர் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டி ருக்கையில் மர்ம மனிதர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த இவர் முன் விரோதம் காரணமா கவே கொலை செய்யப்பட்டிருக் கலாம் எனக் கருதப்படுகிறது.

பொலிஸார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ள போதிலும் இது வரை குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கடந்த சிலமாத காலமாக தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் கொள்ளைகளும் கொலைகளும் பரவலாக நடைபெற்று வருவதும், இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளி கள் ஒருவர் கூடக்கைது செய்யப் படாமல் இருப்பதும் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்ப தையே வலியுறுத்துகின்றதென அரசியல் அவதானிகள் கருது கிறார்கள். (து)

## உண்மையை உணர முடியாத நிலையில் பா.ஜ.க.வினர்

(டில்லி)

டில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஒருநாள் கூட்டம் அக்கட்சியின் தலைவர் சோனியாகாந்தி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மத்தியில் காங்கிரஸ் தலை மையிலான ஆட்சி அமைந்த பிறகு முதன் முறையாக நடை பெற்ற அக் கூட்டத்தில் பேசிய அவர் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவை மக்கள் முற்றிலுமாக நிராகரித்து விட்டார்கள் என்றார்.

ஆனால் பா.ஜ.க.வினரின் பதவி, தனிப்பட்ட ஆதாய நோக்கு ஆகி யவை, உண்மை நிலையை அறிய முடியாமல் அவர்களின் கண்களை மறைத்துவிட்டன என்று அவர் குறை கூறினார். மக்கள் நிரா கரித்துவிட்டதை பா.ஜ.க.வினரால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை யென்று சோனியாகாந்தி மேலும் குறிப்பிட்டார்.

பிரதமர் மன்மோகன் சிங் பேசிய போது பணவீக்கத்தைத் தடுக்க அத்தியாவசியப் பொருட் களின் விலைகளைக் கட்டுப்படுத் தும் நடவடிக்கைகளை தமது அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து 7 முதல் 8 வீத பொருளாதார வளர்ச்சி, மகளிருக்கு 33 சதவீத ஒதுக்கீடு உள் ளிட்ட 40 அம்சத் திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்குமாறு காங்கிரஸ் தலைமை யிலான மத்திய அரசை வலியுறுத தும் தீர்மானம் உட்பட பல தீர்மா னங்கள் நிறை வேற்றப்பட்டன. (து)

## மணலால் மூடப்பட்ட புராதன ஆலயங்கள்

கடும் வரட்சி காரணமாகக் காரைக்கால் பகுதியிலுள்ள வஞ் சியாறு வரண்டுவிட்டதால் கட்டு மானப் பணிகளுக்காக மணல் அள்ளப்படுகிறது.

சமீபத்தில் இவ்விதம் மணல் அள்ளும போது 10 அடி ஆழத்தில் கற்தூண்கள் புதையுண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் அவ்விடத்தைத் தோண்டிய போது, கற்களில் செதுக்கப்பட்ட புத்தர் சிலைகள் பல கண்டெடுக்கப்பட்டன.

இப்பகுதியில் 108 கோவில்கள் இருந்ததாகவும் கால ஓட்டத்தால் இக் கோவில்கள் மணலால் மூடுண்டு அழிந்து போயிருக்கலா மென்றும் பொதுவான கருத்து அப் பகுதி மக்களிடையே நிலவி வரு கிறது.

தொல்பொருள் அகழ்வாராச் சித் துறையினர் அப்பகுதியில் ஆய்வு நடத்தினால் மேலும் பல கோவில் சிதைவுகளைக் கண்டு படிக்கலாமென அப்பகுதி மக்கள் கருதுகிறார்கள். (து)

# வியாழ மாற்றம்



(நேற்றைய தொடர்ச்சி)

## கன்னி



15.08.2004
முதல்
28.09.2004
வரை

இது சூரியன் சாரகுரு என்பது கவனிக்க வேண்டும். சகோதரி வகையில் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாட்டை படிப்படியே குறைத்து மன அமைதியையும அடைவீாகள். நாகாிக வாகனம மூலம் ஏற்பட்ட நட்டத்தையும் சரிக்கட்டி விட்லாம். நல்ல நண்பர்கள் சேர்க்கை உங்களுக்கு தொழிலில் உற்சாகத்தை உண்டாக்கும். கணவன், மனைவி உறவு சுமாராகவே இருக்கும். விசேடங்களுககுச் சென்று வாக்கு வாதத்துடன், திரும்ப வேண்டி இருக்கிறது. உங்கள் நிலையில தெளிவான போக்கு, மகிழச்சிகரமான சூழ்நிலையும் எதிர்பார்க்கலாம். குழந் தைகள வகை தேக ஆரோககிய விருத்தி, கல்வி பின் குணமாகும். உத்தியோகத்தில் சிறு மாற்றம் இருக்கின்றது. குடும்பப் பெண்களுக்கு பற்றாக்குறை இருந்தாலும் கடந்த வருடத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த வருடம் உயர்ந்து தான் இருககிறது. தன நிலையல்நல்ல முன்னேற்றம் இருக்கிறது. சிலருக்கு குடி மாற்றம், உத்தியோக இடமாறுதல் போன்றவையும் நிகழும், பெரிய மனிதர்களின் தொடர்பு பெருமைக்குரி யதாகவே இருக்கிறது. புதுவீடு குடி போகுதல், திருமணம் போன்ற சுபவிஷயங்களால்செலவுகள் பாதிக்கும் காலமிது.

**அதிர்ஷ்ட எண்கள் : 5,3,9**

**அனுகூலத திக்குகள் : தெற்கு, மேற்கு**

**28.09.2004 முதல் 11.11.2004வரை**

இந்த குரு விரயாதிபதி சாரத்தை உடையவன். பிரச்சினைகள் சில தலைதூக்கவும கூடும் என்பதால் மேல்மட்ட மனிதர்களின் இதமான அணுகுமுறையால் இதனை சீர் செய்து கொள்ளலாம். உயர்மட்ட மனிதர்களின் தொடர்பு உங்கள் தொழிலை பெருக்க உதவியாக இருக்கும். மற்றும் சில வகையில் பெரிய ஆதாயத்தை உண்டாக்கக் கூடியது. கடன் வகை கட்டுப் படடிருக்கும். வழக்குப் பாதிக்காது. பூர்வீக சொத்து வகையில் இருந்த வழக்கு ஒரு முடிவுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. பழைய உறவு மனிதர்களின் சந்திப்பு உண்டாகும். இப் பிரிவு விவசாயிகளுக்கு குடும்ப வகையில் பெரிய பொறுப்பு இருப்பதை உணர்ந்து செயல்படுவது மிகவும முக்கியமாகும். குடும்பம் அல்லாமல் வேறு வகைப் பெண் அல்லது ஆண் நட்பு இருப்பது மற்றவர்களால் குறை கூறப்படும். இருப்பினும் கால் கோள்களின் செயலை, யார் வெல்ல முடியும். எனவே உங்கள் செயலை நல்ல வழியில் துரிதப்படுத்துங்கள். சிலர் உபதொழிலாக புதிய ஈடுபாட்டில் செயல்படுவதும் உண்டாகும். வேலையாட்கள் விரும்பியபடி செயல்படுருக்கு மீண்டும் பழைய தொழில் சம்பந்தமான முயற்சி இருக்கும்.நீங்கள் இருக்கும் வேகம் மற்றவர்களையும் அதேபோல் தூண்டாது என்பது ஒரு குறையாக இருக்கும். எனவே உடன் இருப்போரை இதமாக ஈடுபடுத்துவது சிறப்பாக இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 4,6,7**

**அனுகூலத் திக்கு : தென்கிழக்கு**

**11.11.2004 முதல் 26.12.2004 வரை**

அரசாங்க சம்பந்தப்பட்ட எல்லாக்காாியங்களையும் அமைப்பாக முடித்து விடுவீர்கள்.இதர வழிகள் சற்று மந்தமாக செல்ல வேண்டியதாக இருக்கும். விருந்து வேடிக்கை அனுபவிப்புகள் குறைவு தான். சில சமயம் கண்விழித்தும் காரிய சாதனையை புரிய வேண்டி இருக்கிறது. கணவன், மனைவி உறவு கண்ணியம் கனிவு கொண்டதாக இருந்தாலும், குடும்பத்தில் மூன்றாவது மனிதர்களால் குழப்பம் உண்டாவதை கட்டுப்படுத்த முடியவில்லை. இப்போது உங்களுடன் அரசியல் மனிதர்கள் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருப்பதால் காரிய சாதனையும் சுலபமாக இருக்கும். இயந்திர வகையில் செலவுகள் செய்ய வேண்டிய அவசியம் இப்போது இருக்கும் . மலை,வனப் பிரதேச மனிதர்களால் சில நன் மைகளும் இடம்பெறும் .கலைத்துறை தொழில் உள்ளவர்களுக்கு சில செய்து வைத்த வேலைகள் அப்படி ஸ்தம்பித்து நிற்கும். மிகவும் வேண்டியவர்கள் என நினைத்தவர் மூலமே பாதிபு உணடாகும். பெண்களுக்கு ஜன்மத்தில் சூரியனும் சில வழியில் உங்களுக்கு ஆதாயத்தைச் செய்யக் கூடியவர்களே. தன நிலையில் வளர்ச்சி இல்லை. ஆனால் சகோதர, சகோதரி வகையில் காரணமின்றியே கருத்து வேறுபாடு உதயமாக வாய்ப்பு இருக்கிறது.மற்றும் சுக்கிரன் உச்சமாக இருப்பது குடும்பத்தல் கணவனோ அல்லது மனைவியோ

**அனுகூலத் திக்கு : வடக்கு**

**26.12.2004 முதல் 11.02.2005வரை**

ஆரம்பத்தில் சில குழப்பநிலை இருப்பதும்.பின் படிப்படியே சீர் அடைவதும் குறிப்பிடத்தக்கது. கணவன், மனைவி உறவு கனிவு கொண்டதாகவே இருக்கும். தேக ஆரோக்கியம் ஒரேசீராக இருக்கும். குழந்தைகள் வகையும் மனதிருப்தி அளிப்பதாக இருக்கும். குடும்ப உறவினா் நண்பர்களுக்கு விருந்து கொடுக்க வேண்டியவர்கள் நீங்கள். கூட்டுத் தொழில உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் விடடுக் கொடுத்துபபோக வேண்டும். சில விஷயங்கள் புகைந்து கொண்டு இருப்பது உங்களுக்குப் புரியவரும். சகோதர வகையில் இருந்து வந்த மனபேதம உங்களை விடாது. சிலர் போட்டி, பந்தயம்,ரேஸ், லாட்டரி போன்ற வழியினில் தொடர்ந்து விரயத்தை உடையவர்களாக இருப்பர். இப்பிரிவு உத்தியோகம் உள்ள ஆண், பெண்களுக்கு அலுவலக போக்கு சீராக இருக்காது. சேர்த்து வைத்தபணத்திற்கும் செலவு வந்து விடும். கலைத் தொழில் உள் ளவர்களுக்கு தொடர்ச்சியாக பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும். உங்களுக்கு ஆகாத சக்திகள் தான் ஓங்கிநிற்கும். பல்,காது சம்பந்தமான பிணியும் பாதிக்க வாய்ப்பு உண்டு. குடுமபவகையில் இடை இடையே மருத்துவ செலவுகளும் இடம்பெறும். இந்த நிலை உங்களுடைய பிரயாணத்தையும தளளிப்போட வைத்துவிடும். தொழில் ஈடுபாடு வேகம் குறைந்து காணப்படும். கூட்டுத் தொழில் உள்ளவர்கள் பக்குவமாக செயல்ப்பட வேண்டும். பழைய விஷயங்கள சிலவற்றைப் புதுப்பிக்கும் வாய்ப்பு இப்போது இருப்பதை பயன்படுத்திக் கொள்ளவும் இதேபோல பழைய நட்பு மீண்டும் ஒன்று சேர வாய்ப்பு இருக்கிறது. கணவன் மனைவி இடையே சிறு முணு முணுப்பு தவிர

# உங்களுக்கு எப்படி?

மேன்மையும் உண்டாக்கும. சிலர் வாகன சத்தியைப் பெறுவது வழக்கு வெற்றி சுப விஷயம் குறித்த கடிதங்களைப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. தொழில் வகை மட்டும் வேகமில் லாமல் 'இருக்கிறது. தொழில் இட மாற்றமும் நிகழ வாய்ப்பு இருக்கிறது. புதிய கூட்டும் உண்டாக்கக் கூடும். எனவே மனத்தளர்ச்சி இன்றி செயல்படுவது சிறப்பாக இருக்கும் ஆரம்பத்தில் தடைகள் இருந்த போதிலும் வெற்றி இருக்கிறது. முதல் பகுதியில் இருந்த இடையூறுகளை படிபபடியே அகற்றி விட்டீர்கள் எனலாம். வேலையாட்கள் அல்லது உடன் இருந்தவர்கள் உங்களை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை வந்தடைவர். உங்கள பொன்னான நேரத்தை வீணாக்காமல் செயல்பட வேண்டிய மாதமிது. சில சமயம் நீங்கள் ஆரம்பத்தில் இருப்பது போல முடியும் தறுவாயில் இயங்காததால் பாதிககப்படுகிறீர்கள் அல்லது தாமதமாக்கப் படுகிறீர்கள். இந்தக் குறையை போக்குவதுதான் முக்கியமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்கள் முயற்சிகள் பாராட்டுக்குரியதுதான். உணவு கொள்வது, அகால உறக்கம், மன உளைச்சலையும் உண்டாககும். இதற்கு குரு சாரத்தால் பல மடைந்திருக்கிறான் என்பதுதான். சத்ரு சாரகுரு உங்கள் சக ஊழியர்களையே பகையாக்குவான். உங்கள் நிலையில் நீங்கள் படிபபடியே உயர்வடைவீாகள். பணம் வரும், பகைவர், மறைவர், புத்திரர் கல்வி மேன்மை திருப்தியாக இருக்கும். பூர்வீகசொத்து சம்பந்தமான வகையில் இருநத சிக்கலும் தீர்க்கப் பட்டுவிடும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு கவர்ச்சிகரமான சிலவகை ஒப்பந்தம் கூடிவரும். நாகரிக வாகன சேர்க்கையும் உண்டாகும். மாணவ, மாணவியர்களுக்கு கல்வி தேர்வு கவர்ச்சிகரமாக இருக்கின்றன. மனைவி உறவில் மகிழ்ச்சியான சூழ்நிலையும் உருவாகும். குடும்பப பெண்களுக்கு பாராட்டுகளை உண்டாககும். உறவு வழியில் விலகி இருந்தவர்கள் இப்போது அருகில் வந்துவிட்டனர். கணவன வகையில் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி, சுமுகப் போக்கு நிலவும், செலவும் இருக்கும், ஆரோக் கியம் பாதித்துவர். வழக்கு கடன் வகைகளும் கட்டுப் பட்டதாக இருக்கும்.இயந்திரம் வாகன தொழில் உள்ளவர்கள் இப்போது பெருமளவில் சுப விரயங்களை செய்துவிட்டு இப்போது நடைமுறை முதலுக்கும் சிரமப்பட வேண்டியிருக்கும். கடன் தவணைகள் கட்டுவதில் காலதாமதம் தவிர்க்க முடியாமல் இருக்கும். குடும்பத்தல் முணு முணுப்பு இருந்து கொண்டே இருக்கும். மாணவ,மாணவியர்களுக்கு புதன் உச்சம், புதிய தெம்பை உண்டாக்கும். கல்வி உயர்வு பெருமைப்படக் கூடியதே.

கணக்கு வகையில் லாபம் காட்டாது. குடும்ப வகையில் குறித்தபடி செயல்பட முடியாத காரணத்தால் கருத்து மோதலகளும் இருக்கும். சிலசமயம் இது புத்திரன் அல்லது புத்திரியர்களுடன் இருக்கலாம். விவசாயிகளுக்கு தானியம், காரப் பொருள்கள் மூலமாக கணிசமான அளவு ஆதாயம் இருந்த போதிலும் செலவிடும் வழிகள் சரியாக இருக்காது. உத்தியோகப பிரிவு ஆண்,பெண்களுக்கு இப்போது அலுவலக சூழ்நிலை அமைதியாக இருக்கும் ஆனால 7 நிமிடத்து கிரகஙகள் வீட்டிலே வினையை உண்டாக்கும். ஆரம்பமே ஏதோ ஒரு இனம் புரியாத பயம் இருக்கும். இதற்குக் காரணம் தைரியக்கோள் பலம் குறைவுதான். தொழில் சம்பந்த மானவர்களின் தொடர்பில் ஒரு வகையான இடைவெளி இருக்கும். பணப்புழக்கம் எதிர் பார்த்தது போல் இருக்காது. புத்திரன் அல்லது புத்திரியின் போக்கு மனதிருப்தி அளிக் காது. கடன் வகையிலும் கவனம் செலு த்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. சில சமயம் கணவன ,மனைவி உணவுப் பொருள், தொழில் உள்ளவர்களுக்கு மிகப்பெரிய பணவரவு இருக்கிறது. மேற்கு, வடமேற்கு,திக்கு பிரயாணம் மிகப் பெரிய வெற்றியை கொடுக்கத் தக்கதாக இருக்கும். கலைத்தொழில் உள்ளவர்களுக்கு பழைய ஒப்பந்தம் புதுப்பித்தல் தொழில வழி ஆதாயத்தைப் பெருக்கும். ராகு எதிர் பாராதன வரவையுங் கூட செய்வான். உங்கள் அவசர காரியங்களும் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டுவிடும். இப்போது சத்ருவகை பாதிப்புக்கு இடமில்லை. சில பிடிவாதப் போக்கினால் பெரும் இழப்புககு ஆளாகுவர். இதில் கௌரவபபிரச்சினை முன்நிற்கும். விட்டுக் கொடுத்து செயல் படுவதால் வெற்றி நிச்சயம் உண்டாகும். மாணவ,மாணவியர் தேர்வை கவனிதத எழுத வேண்டும். குழந்தைகள் வகை மருத துவச் செலவுங்கூட இடம்பெறும்.

தொடர்ந்து வெற்றி நெறவும் முடியும். இப்பிரிவு உத்தியோக ஆண், பெண்களுக்கு பண நெருக்கடி ஒரு பிரச்சினையாக இருக்கும். இதனால் சுபகாரியங்கள் முடிப்பது தள்ளிப் போய்விடும். மேலும் நடுப்பகுதிக்கு மேல் உங்கள் தொழில் வகையில் நாட்டமில்லாத தன்மையை உண்டாக்கும். அடிக்கடி விடுப்பில் இருப்பது உண்டாகும். நீங்கள் நல்ல நணபர்கள் குழுவை உடையவர்கள் உஙகள் வேலைகள் அல்லாமல் பொதுப் பணியையும் மேற்கொள்ளக் கூடியவர் என்பதால் மற்றவர்கள் உதவியும் தக்கசமயத்தில் கிட்டுவதில தடை இருக்காது. இப்போது நங்கள் வேகமாக செல்கிறீர்கள் என்பது தெரியும். வேண்டாதவர்கள் என நினைத்தவர்களும் இப்போது உங்கள்வேலையை வேண்டிய மட்டும் செய்வதைக் காணலாம். சிலர் இதே நேரம், தருமஸ்தாபன உதவி செய்வதும் இருக்கும் உறவினர்கள் உங்களை விட்டு சற்றுவிலகியே இருப்பர். மாதம் முதலில் இரண்டு வாரங்கள் பொதுவாக அலைச்சலே அதிகமாக இருக்கும் பின் படிப்படியே குறைந்துவரும். சிலருக்கு சொத்து சம்பநதமான வகையில் குமுறல் இருந்து கொண்டே இருக்கும். இதைக் கையாள்வது பக்குவமாக இருக்க வேண்டும். வழக்குவரை போகவிடக்கூடாது. கலைத்துறை தொழில் உள்ளவர்களுக்கு கூடடாளிகள் பிரச்சினைகள் இருந்த போதிலும் தொழில் வழியில் வேகம், பிறந்திருப்பதை உணரலாம. அந்த வகையில் ஒருமித்த கருதது இருக்கச் செய்யும். கடன் வழக்கு விஷயங்கள் உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு எல்லாக் கிரகங்களும் பரவலாக ஸ்தான பலம் பெற்றிருக்கையனால், அலுவலக போக்கு அமைதியாகவே இருக்கும். சில சமயம் வேடிக்கை விருநது அனுபவித்தலும் இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 7,2,9**

பெரிய பாதிப்புகள் ஏதும் இல்லை. பணம் கொடு க்கல், வாங்கல் மிதமாக இயங்கும் பிரச்சினை எதுவாக இருநத போதிலும் உடனுக்குடன் முடித்து மகிழ்ச்சி அடைவீர்கள். ராகு லாபத்தில் உச்சம் பெற்றிருக்கிறான். பலவழி லாபங்களை எதிர் பார்க்கலாம். அதேநேரம் ஆரோக்கியத்தில் குறை வைப்பான் என்பதால் எச்சரிக்கை தேவை. இப்போது மனைவி ஆரோக்கியத்தையும் கவனிக்க வேண்டும. மற்றும் குடும்பத்தில் வயதில் மூத்தவர்கள் வகை மருத்துவச் செலவும கூட இடம் பெறச் செய்யும் . சில வகையில் உங்களுக்கு அவசர செலவுசுகள் இருக்கும். அலுவலக சூழ்நிலையுங் கூட பதடடம் உடையது தான். இதன் காரணமாக மேல் நிலை மனிதர்களை சந்திக்க வேண்டியும் இருக்கும். குடும்பத்தில் எந்த வித பாதிப்பும் இல்லை என்றாலும் வெளி வட்டாரம் சிறப்பாக இல்லை. சிலவகையில நீங்கள் மறைத்து செய்த காரியங்கள் சில வெளிப்படுத்துவதால், மனச் சலனம தோன்றி மறையும். இதனால் உடனிருநதவர்கள் சிலர் பகையும் உண்டாகும். உங்களால் பாதிக்கப்பட்டவரே மீண்டும் உங்களை நாடுவர். தொடர்ந்து நல்ல சூழ்நிலையும் உருவாகும் கணவன், மனைவ உறவிலும் இனிமை யான போக்கு தொடர்ந்து இருக்கும் அரசாங்கம் அரசியல் சம்பந்தப் பட்டவர்கள் சந்திப்பு உங்களுக்கு சில குறிப்பிடக்கூடிய நன்மைகளையும் உண்டாக்கும் என்பதால் பெரிய திட்டங்களுக்கு வழிவகுக்க வேண்டி இருக்கிறது கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு இது பெருமை தரும மாதம் என்பதில் சநதேகமில்லை சில புதிய முயற்சிகள் செய்வதற்கு மூன்றாவது மனிதரும் உறுதுணையாக இருப்பர். அயல் நாடு செல்வதிலிருந்து வேடிக்கை சுகம் அனுபவிப்புகளும் உண்டாகும். இனி மையான கனவுகளைக் காட்டும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 2,4,7**

**அனுகூலத் திக்குகள் : கிழக்கு, வடக்கு**

(தொடரும்)

# நஜாப்பை முற்றுகையிட அமெ. படைகள் கடும் முயற்சி

## பலமுனைகளிலும் மோதல்கள் தொடர்கின்றன

(வாஷிங்டன்)

ஈராக்கின் புனித நகரமான நஜாப்பின் மீதான தனது முற்றுகையை வலுப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது.

நேற்று காலையும் அமெரிக்க யுத்தக் ஹெலிகொப்டர்கள் நஜாப் நகரிலுள்ள ஷியாத் தீவிரவாதிகளின் நிலைகள் மீது உக்கிரமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவம் இமாம் அலி - தர்காவை மையமாகக் கொண்டு இடம்பெற்று வருகின்ற கிளர்ச்சி நடவடிக்கைகளை அடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற இராணுவ நடவடிக்கையின் ஒரு கட்டமாக அமைந்துள்ளது.

ஈராக்கிலுள்ள ஷியா இன முஸ்லிம்களின் புனித ஸ்தலமான இமாம் அலி - தர்காவிற்கு நெருக்கமாக 800 மீற்றர் தூரத்திற்குள் அமெரிக்க யுத்த தாங்கிகள் முன்னேறியுள்ளன.

அமெரிக்க தாக்குதல் காரணமாக தர்காவின் சுவர் ஒன்று சேதமடைந்துள்ளது என மொஹ்ராடா அல் - சதாரின் ஆதரவுப்படையின் சிரேஷ்ட தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தர்காவிற்கு கடும் சேதம் ஏற்படுமிடத்து அது ஷியாக்கள் மத்தியில் கடும்சினத்தை ஏற்படுத்தக் கூடும் என சுட்டிக்காட்டியுள்ள அந்நாட்டு அரசியல் அவதானிகள் இது அமெரிக்கப்படையினர் மீதான எதிர்ப்பலையை மூர்க்கப்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்த கவிழ்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் ஆரம்பித்து இதுவரை ஈராக்கில் உயிரிழந்துள்ள அமெரிக்க படையினரின் எண்ணிக்கை 719 ஆக அதிகரித்துள்ளது. (ப-யே)



பங்களாதேஷில் தலைதூக்கிய வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அங்கு பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளன இதனை அடுத்து டாக்கா பகுதியில் பங்களாதேஷ் விஷேட அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைப்படத்தில் காணலாம்.



நேபாளத்தில் மவோ தீவிரவாதிகளால் போடப்பட்டுள்ள தடைகளை நீக்குமாறும் உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளு மாறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கு மாறும் மனித உரிமைகளை மதிக்குமாறும் நேபாள அரசுக்கு கோரிக்கை விடுத்து சமூகத் தொண்டர்கள் நேற்று முன்தினம் நேபாளத் தலைநகரான காத்மண்டுவில் நடத்திய ஊர்வலக் காட்சி.

## கடத்திச் சென்ற அமெரிக்க ஊடகவியலாளரை தீவிரவாதிகள் விடுவித்தனர்

(பக்தாத்)

ஈராக்கில் ஷியா தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க ஊடகவியலாளர் மைக்கல்ஹரன் விடுவிக்கப்பட்டுள்ளார்.



ஈராக்கில் இடம்பெற்றுவரும் மோதல்கள் குறித்து செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஊடகவியலாளர் மைக்கல்ஹரன் ஈராக்கின் தென்பகுதியில் உள்ள தஸ்ரியா நகரில் சிலகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தபின்னர் விடுவிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தன்னைப் பாதுகாத்து விடுவித்த தீவிரவாதிகள் உள்ளிட்டோருக்கு மைக்கல்ஹரன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மைக்கல்ஹரன் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகச் செயற்படும் கொள்கையுடயவர் என்பதினாலேயே அவரைத் தாம் உயிருடன் விடுவித்திருப்பதாக தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க ஈராக்கில் பணிபுரிந்து வந்த இருபிரான்ஸ் பத்திரிகையாளர்களும் ஒரு இத்தாலிய பத்திரிகையாளரும் தீவிரவாதிகளால் அண்மையில் கடத்திச்செல்லப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

## சீனா - தாய்வானுக்கிடையே மோதல்கள் ஆரம்பிக்கும் அபாயம்

## உதவுவதில் சிங்கப்பூர் குழப்பம்


(சிங்கப்பூர்)

தாய்வானுக்கும் - சீனாவுக்கும் இடையே மோதல்கள் ஆரம்பித்ததால் தாய்வானுக்கு தாம் ஒருபோதும் ஒத்துழைப்பினை வழங்கப்போவதில்லையென சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது.

தாய்வான் சீனாவிடம் இருந்து பிரிக்கப்படவேண்டும் என்பது குறித்து எழுந்துள்ள கருத்து மோதல்களால் ஏற்படவிருக்கின்ற விளைவுகள் குறித்து சிங்கப்பூரின் புதிய பிரதம மந்திரி கவலை தெரிவித்துள்ளார்.

இருதரப்பினருக்கும் இடையே மோதல்கள் ஆரம்பமாகினால் எந்தத் தரப்பினருக்கு ஆதரவினை வழங்குவது என்பது தொடர்பாகத் தாம் தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

எனினும் இந்த மோதல்களைத் தாய்வான் முதலில் ஆரம்பித்தால், தமது உதவி அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது என சிங்கப்பூர் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப -யே)




ஈராக்கில் ஆட்கடத்தல்கள் இடம்பெற்றுவருவதால் அங்கு சென்று பிலப்பைன்ஸ் பிரஜைகள் தொழில்புரிவதற்கு பிலிப்பைன்ஸ அரசு தடைவிதித்துள்ளது. இத் தடை அநேக குடும்பங்களின் வாழ்க்கை தரத்தைப் பாதிப்பதாக ஆர்ப்பாட்க்காரர்கள் சுட்டிக்காட்டியும் இத்தடையை நீக்குமாறு கோரியும் சுமார் ஆயிரம் பேர் திரண்டு பலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவிலுள்ள ஜனாதிபத மாளிகைக்கு அருகில் ஆர்ப்பாட்டம் செய்வதைப் படத்தில் காணலாம்.

## சூடானில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்க ஒன்றியத்தின் உதவியை நாடுகிறார் நைஜீரிய ஜனாதிபதி

(லாகூர்)

சூடானில் இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவதற்கான முழுப் பொறுப்பும் அமெரிக்க ஒன்றியத்திற்கு உண்டு இதனால் அமெரிக்க ஒன்றியம் உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என நைஜீரிய ஜனாதிபதியும், ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவருமான ஓபாசன்யூ தெரிவித்துள்ளார்.

அத்துடன், சூடானின் டாபூர் பகுதியில் நிலை கொண்டுள்ள தீவிரவாதிகளது ஆயுதங்கள் சர்வதேசப் படையினரால் களையப்படல் வேண்டும் எனவும் சூடான் அரசை அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சூடானின் டாபூரில் இடம்பெற்று வரும் மோதல்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஒன்றியத்தின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர்க்கு உதவியாக ருவாண்டாத் துருப்புக்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன், மேலும் ஒரு தொகுதி நைஜீரியத் துருப்புக்களும் அங்கு அனுப்பிவைக்கப் படவுள்ளனர். (ப)

WORLD NEWS உலக தரிசனம்

## பாக்-இஸ்லாமிய மதத்தலைவர் நோர்வே செல்வதற்கு அனுமதி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் சர்ச்சைக்குரிய இஸ்லாமிய மதத்தலைவரான குவாஸிஸ் சைனுக்கு நோர்வே செல்வதற்கு நுழைவு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

அல் - கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடனின் ஆதரவாளர் என்று கருதப்படும் குவாஸிஸ் சைனுக்கு நோர்வேயின் மாநகர விவகாரங்களுக்கான அமைச்சர் எர்னோர் ஷில்பேக் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக தலிபான் அமைப்புக்கும் தாம் ஆதரவளித்து வந்ததாக பாகிஸ்தானின் ஜமாதி இஸ்லாமியக்கட்சியின் தலைவர் குவாஸிஸ் சைன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (யே)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level)

ENGLISH
PART II
Time - 2 hour

ஆக்கம் :
Mrs.V.Sivapathaviruthayar
J/Navalar Maha Vidiyalayam,Jaffna

## Answer all Questions

9. Complete the following sentences with the most suitable word from the brackets .

ex: Failures are pillars of...Succes....... (success, succed, successful)

1) Mount Everest is the .......................... mountain in the world, with a height of 8848 metres (High, Highest, higher)

2) Our school ....................... (tourist, tour, tourism ) Covered the whole of Anuradhapura and polannaruwa.

3) I enjoy reding all kinds of poetry but I have never written a ..................... (poetry, poem, poetic ) in my life.

4) A house painter may ask Rs. 600 for a ........................... (days, daily,day)

5) (success, succeed,successful ) in getting admission to the universities.

10. Given below are the ways we benefit from the environment, Say how we damage the Sources we benefit from.

Choose the phrases from the box and complete the following text.

| | |
|---|---|
| dump the waste and garbage on the baneland and destroy their beauty | give in the smoke and fumes from home fire, faclonies and vehicles |
| spill large quantities of oil from the tankers into the sea and kill the wanter lives | empty the waste, chemicals and dyes into there water beds and poism them. |

i) We take in the fresh air from the atmosphere but we ..........................

ii) We use the water from lakes, rivers and ponds for drinking, bathing and washing but we .........................................

iii) We see and enjoy the landscape under the shady trees growing there but

iv) We eat the sea foods like fish, crabs and prawns but we.............................
..............................................

11. Imagine that you are a librarian in your school library. write five instructions that you could give to your students.

12. Read the dialouge between Nimal and the clerk at the Travel agents. Complete the blanks with suitable words. the first letter of each word to be completed is given. one has been done for you.

Clerk: Good .morning........, can I help you?
Nimal: yes, I want to go to london with a day or two in moscow on the way.
Clerk: Fine. We can a ............................................. that for you.
Have you brought your p.................................................?
Nimal: yes. it is
Clerk:Thank you. you will need visa.
please fill in these f........................... for the British high commission and the soviet Embassy.
Nimal: Here you are. I hope I've filled them C..........................................
Clerk: Let me see, yes they are all in O.........................................
I'll telephone you when we are ready to make out the ticket.
Nimal: Thank you.

13. The students union of your college has decided to hold a seminar on "The spread of dengue in the area"

The following topics will be discussed:
1) How it is spread?
2) Preventive action is to be taken

Prepare a notice to inform all students about the seminar indicating date, time and venue. Also indicate the resource person who will be conducting the seminar.

14. You have been asked to give a talk at the English Literary association on. "The importance of sports".
Write about the talk that you would present. Use about 100 words.
Here are some guide lines:

1.helps to develop healthy. body and mind.
2.helps to build good character.
3.helps to face victory and defeat alike.
4.helps to develop leadership questions.

15. Read the following passage and answer the questions given below.

When the results appeared in the morning paper, Ramesh scanned them bare foot and in his pyjamas at the garden gate, then went up the steps to the Verandah where his father sipping his moning tea and bowed down to touch his feet.

'A first division son' his father asked, bearning reaching for the paper." At the top of the list Dad" Ramesh murmured. He is first in the country. The Family whooped and danced. The whole day long visitors streamed in the small yellow house at the end of the road, to congratulate the parents of this wonderkind, to slap Ramesh on the back and fill the house and garden with colours of a festival. There were garlands and party cloths and gifts. Ramesh was the first son in the family to receive an education. so much has been sacrifice to school and then medical college and at last the fruits of their sacrifice had arrived, golden and glorious.

1) What kind of a boy is Ramesh?
2) What did the visitors bring?
3) Why did the visitors come to the small house?
4) What does at last the fruits of their sacrifice had arrived golden and glorious mean?

16. write an essay in about 200 words on one of the following topics making use of the hints given.

1) The need for knowledge of traffic rules.
-the rising rate of road accidents.
- the causes for it
- of what help can a knowledge of traffic rules .

2) Environment awareness
-The need for Environment awareness.
-the damages coursed to the environment
-the bad results of environmental damage
- how it can be of help.

வியாழக்கிழமை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பகுதி-I இற்கான வினாக்கள் வெளிவரும்.

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

ஈன்றாள் பசி காண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை -குறள்

# வலம்புரி

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனம் எதற்கு?

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சொகுசு வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்காக ஜப்பானிலிருந்து சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்றும் அவரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைப்பட்ட இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகள் அபிவிருத்தி அடைந்த அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில்கூட கிடையாது என்ற அளவிற்கு உச்சமாகவுள்ளது.

வேட்பாளர்களுக்கு தங்களின் வாக்குகளை வழங்கிப் பாராளுமன்றம் அனுப்பிவைத்த நாட்டு மக்கள் ஒருநேர உணவிற்கு வழியின்றி வறுமையில் வாட, மக்கள் பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சொகுசுவாகனங்களில் பவனி வருவதென்பது எவ்வகையிலும் பொருத்தப்பாடானது அல்ல.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற அதீதமான சலுகைகள் காரணமாகவே அப்பதவியை [illegible]படியாவது எட்டிப்பிடித்துவிடவேண்டுமென்ற போட்டி[illegible] மோசடிகளும், வன்முறைகளும் தேர்தல் காலங்களில் இடம்பெறுகின்றன.

நாம் வெற்றிபெற்றால் வேலைவாய்ப்பு வழங்குவோம், முதலீடுகளை ஊக்குவிப்போம், நாட்டை அபிவிருத்தி செய்வோம் என்றெல்லாம் தேர்தல் மேடையில் கொட்டி முழங்கியவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியதும், தாம் கூறியவற்றை மறந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை பெறுவதிலேயே அக்கறையாக இருக்கின்றனர்.

இதனரல் மக்களின் தேவைகள், அவர்களின் குறைபாடுகளைக் கவனிப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டமற்றவர்களாக இருக்கின்றனர். தேர்தல் காலங்களில் வீடுவீடாகச் சென்று கும்பிகை கையர்களாக, புன்சிரிப்பின் சொந்தக்காரர்களாக, நட்பின் பாத்திரங்களாக, வறுமை ஒழிப்பின் பிதாமகர்களாக தம்மை அறிமுகப்படுத்தியவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றதும் தமது பாவனைகளை அடுத்த தேர்தல் வரும்வரை [illegible]ந்திவைத்துவிடுகிறார்கள்.

அட! இவர்களா நம்ம வீட்டிற்கு வந்தவர்கள். அன்று நாங்கள் தெரியாது என்று கூறியபோது உங்களுக்கு எங்களைத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு உங்களைத் தெரியும் என்று கூறியவர்கள் இவர்கள் தானா? என்று மக்கள் கேட்கும் அளவிற்கு அவர்களின் செயற்பாடு மாறிவிட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து தமது குறைகளைக் கூறுவதற்காக பல மணிநேரம் காத்திருந்தும் பயனில்லை. அவ்வாறு சந்திக்கும் வாய்ப்பு தற்செயலாகக் கிடைத்தாலும் ஒரே நேரத்தில் பலரை அழைத்து தமது மேசைகளுக்கு முன்பாக இருத்திவிட்டு எல்லாரிடமும் முறைப்பாடுகளைக் கேட்டு அதில் எதுவுமே விளங்கிக்கொள்ளாமல் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிவிட்டு, எந்த நடவடிக்கையும் எடுக்காத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள வழங்கப்படப்போகின்றதெனில், அவர்களுக்கு மக்களின் குறை எங்ஙனம் விளங்கப்போகின்றது.

தத்தம் வசதிகளோடு ஒப்பிட்டு மக்களும் அப்படித்தான் வாழ்கிறார்கள் என்று நினைக்கும் இன்றைய யாதார்த்த சூழ்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகள், சலுகைகள் என்பவற்றைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மக்களோடு மக்களாக மக்கள் பணிசெய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பழக்கப்படுத்தவேண்டுமாயின் அவர்களுக்கான சலுகைகளை - வசதிகளை மட்டும் மட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்களின் போது உறுப்பினர்கள் நடந்துகொள்கின்ற முறைமை குறிப்பாக பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் விதம் வேதனை தருவதாக அமைவதற்குக் காரணம், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதீத வசதி வாய்ப்புக்கள் என்பது உணரப்படவேண்டும்.

இத்தகைய வசதி வாய்ப்புக்களை நிறுத்தும்போது இனவாதம் பேசும் பௌத்த பிக்குகளும், காடைத்தனம் புரியும் சிங்களவர்களும் பாராளுமன்றம் புகுவது தடுக்கப்படும்.

# புலிகள் மீது போரைத் திணிப்பதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிடமுடியாது

## பேணாட் அடிகள்- ஜயந்த தனபாலவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளை வலிந்து இழுத்து மீண்டும் ஒரு தடவை போர்தொடுத்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் கருதுகின்றார்கள்

ஆனால் இவ்வாறு எண்ணுவது மடத்தனமானதாகும். அத்துடன் இத்தகைய எண்ணப்பாடும் நகர்வும் பூதாகரமான அழிவைக் கொண்டுவருவதுடன் இனப்பிரச்சினையை மேலும் தூண்டிவிடும் என்று சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகத்தின் இயக்குநர் வண.பிதா அ.இ.பேணாட் அடிகளார் அரச சமாதான செயலக பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில்,

தமிழ்ச் சமூகமானது தென்னிலங்கை அரசியல் சமூகத்திலும் அரசியல் தலைவர்களிலும் வைத்துள்ள நம்பிக்கை விரைவாக வற்றிக்கொண்டே போகிறது. யாழ். சிவில் சமூகத் தலைவர்களுடனான கூட்டத்தில் தாங்கள் கூறியதுபோல் மெதுவாயுள்ள போர்நிறுத்தத்தை நாம் காப்பாற்ற முனையாவிட்டால் விளைவு கள் பாரதூரமானவையாக இருக்கும்.

எம்மைப் பொறுத்தவரை, தென்பகுதித் தலைமைத்துவத்தில் காணப்படும் இரு அடிப்படைத் தடைகள் நீக்கப்படவேண்டும் ஒன்று தலைமைத்துவத்தில் நிலைத்து வந்துள்ள நேர்மையீனம் தென்பகுதியின் நன்மைக்கு மேலாகத் தமது சொந்த அவாவையும் அரசியல் அதிகார மோகத்தையும் நாட்டின் பொது நலனுக்கு மேலாக மதிக்கும் நூற்றுக் கணக்கான அரசியல் தலைவர்களை உருவாக்கியுள்ளது. நீதி நியாயமென்ற பண்பைக் கொண்ட உயர் தலைவர் ஒருவரைக்கூட உருவாக்கத் தவறிவிட்டது. அதியுயர் தலைமைப் பீடத்தில் இருந்தவர்கள் கூட தமிழ்த்தலைவர்களுடன் ஏற்படுத்திய உடன்பாட்டு உறுதிமொழியிலிருந்து தவறிய வரலாறை நாம் அறிவோம்.

இப்பொழுதுள்ள நிலை கடந்தகாலத்தைப் பார்க்கிலும், திறமானதென்று கருதிவிட முடியாது. காலை கூறப்படுவது மாலையில் மறுக்கப்படாதென்பதற்கு உத்தரவாதமில்லை. நாட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் வேண்டாத கூட்டுகள் உருவாக்கப்படுகின்றன. இவை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு காண்பது பற்றி நேர்மையான நோக்கம் இல்லையென்பதையே காட்டுகின்றன.

தற்போது நிலவும் மோசமான குழப்பநிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு நீதி நியாயப் பண்புடைய உயர் தலைவர் ஒருவரை தென்பகுதி முன்வைக்கட்டும்.

சமாதானம் நோக்கிய பாதையிலிருந்து நீக்கப்படவேண்டிய இன்னொரு தடைக்கல் என்னவென்றால் தமிழ் மக்களைக் குறிப்பதற்கு தொடர்ந்தும் பாவிக்கப்படும் சிறுபான்மையினர் என்ற கண்ணோட்டம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இப்பதம் கடந்த காலத்தைச் சேர்ந்தது. சிங்கள சமூகத்தைப் போன்றே கௌரவமும்உரிமைகளும் கொண்ட ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அல்லாத எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்பார்களென நான் கருதவில்லை. எந்த மட்டத்திலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டாலும். இந்த சமத்துவம் பேணப்பட்டே ஆக வேண்டும்.

ஐ.எஸ்.ஜீ.ஏ. பற்றி அன்றைய எமது கலந்துரையாடலில் பேசப்பட்டதால் அதைப்பற்றியும் ஒருவார்த்தை குறிப்பிட விரும்புகிறேன். இதுபற்றி விடுதலைப் புலிகள் இறுக்கமான நிலையைப் பேணுகின்றார்கள் என்று குற்றம்சாட்டிக் கொண்டிருப்பது வீணானது.

ஏனென்றால், பொதுமக்கள் தாமே பல காலமாக இத்தகைய அமைப்பொன்று தேவையென்பதை முன்வைத்திருந்தனர். மக்கள் தம்முடைய அபிவிருத்தியைக் கடந்த கால அரசுகள் எவ்வளவுக்குப் புறக்கணித் தார்களென்பதை நன்கு அறிவர். தமக்குரிய நிதிகள் எவ்வாறு வேறு நோக்கங்களுக்காகத் திசைதிருப்பப்பட்ட தென்பதையும் அறிவர். இந் நிலையில் தமது அபிவிருத்திக்காகப் பணத்தைப் பெறுவதற்கும், அதை செலவிடுவதற்குமான உரிமையை அவர்கள் கோருவதில் என்ன தவறு? அப்பணம் அந்த அபிவிருத்தி மட்டில் அர்ப் பணமும் பொறுப்புமுள்ள கரங்களில் ஒப்படைக்கப்படு தலை உறுதிப்படுத்த விளைவதில் என்ன தவறு?

நேர்மையான உள்ளத்துடன் எவ்வளவு விரைவில் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கு முற்று முழுதான முறிவைத் தவிர்ப்பதற்கு வாய்ப்புண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-க)

## மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது அமைச்சர் சுசில் மீண்டும் உறுதிமொழி

(கொழும்பு)

மின்சாரக்கட்டணங்கள் தற்போதைக்கு அதிகரிக்கப்பட்ட மாட்டாதென மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்த மீண்டும் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க அனுமதிவழங்க வேண்டும் என இலங்கை மின்சார சபை வேண்டுகோள் விடுத்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கச்செய்து ஏற்கனவே அதிகரித்த வாழ்க்கைச் செலவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் அரசாங்கம் சுமையை ஏற்படுத்த விரும்பவில்லை என்றும் அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

முகாமைத்துவப் பற்றாக்குறை காரணமாக இலங்கை மின்சார சபையின் நிதி வழங்கல பாதிக்கப்பட்டுள்ளன.

உயர்ந்த உற்பத்திச் செலவீனம் குறைந்த மின்சாரக் கட்டணம் ஆகியனவும் நிதிநெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளன.

அத்துடன், மின்சார சபைக்கு 5 பில்லியன் ரூபா கடன் தொகையை அரச நிறுவனங்கள் செலுத்தவேண்டும் அவ்வாறு அரச நிறுவனங்கள் கடனைச் செலுத்தினால் மின்சார சபையின் நிதி நெருக்கடி ஓரளவு குறையும் என்றார்.

(ந-க,60)

# வித்தியாசமான பிரேரணைகள் அனுப்பப்பட்டதான ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கு புலிகள் மறுப்பு

(கொழும்பு)

புலிகளுக்கு எட்டு வித்தியாசமான பிரேரணைகளை அனுப்பியி ருந்ததாக ஜனாதிபதி தெரிவித்த கருத்தினை மறுத்துள்ள புலிகள், ஜே.வி.பி யுடனான வேறுபாடுகளைக் களைந்து ஒருமித்த கருத்துடன் தம்முடன் பேசவருமாறு கோரியுள்ளனர்.

கடந்த வாரம் யு.பி.ஐ. சர்வதேச அமைப்புடன் நடாத்திய கலந்துரையாடலின் போது, தான் பல பிரேரணை களை முன் வைத்ததாகவும் ஆனால், அதற்குப் புலிகள் எத்தகைய பதிலையும் அனுப்பவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

மேலும் தற்போது புலிகளை இராணுவ ரீதியில் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை இடைக்கால நிர்வாகம் என மாற்றப்படவேண்டும் என விரும்புகிறார்.

ஆனால், இதை புலிகள் நிராகரித்துள்ளனர். வேறு எந்தப் பிரேரணைகளும் எங்களுக்கு அனுப்பப்படவில்லை. அவரின் அறிக்கையில் உண்மை இல்லை. இது வெறும் செய்தி மட்டுமே எனக் கூறினார்.

முதலில் ஜனாதிபதி ஜே.வி.பி யுடனான வேறுபாடுகளைக் களையவேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தின் அனைத்து அங்கத்துவக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து ஒரு நிலைப்பாட்டை கொண்டிருப்பது மிகவும் அவசியம் எனவும் தயா மாஸ்ரர் மேலும் தெரிவித்தார்.

(ந-6)

## நல்லைச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடாத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கில் 4ஆம் நாளான இன்று எஸ். சோபிதாஸ், கே. குகபரன் எஸ். அப ராஜிதன் ஆகியோரின் வயலின் இசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

அத்துடன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நாவலர் மணி மண்டபத்தில் உற்சவகாலத்தில் தினமும் இரவு 7 மணிக்கு நடாத்தப்பட்டுவரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்றும் தமிழக விரிவுரையாளர் சாண்டில்யன் இராமகிருஷ்ண மூர்த்தியின் சிறப்புச்சொற் பொழிவு இடம்பெறவுள்ளது.

மற்றும், இலங்கை சின்மயா மிஷன் ஆதரவில் நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8.30 மணிவரை "கிளிக்கண்ணி பாட்டு" எனும் மகுடத்தில் பிரமச்சாரி ரமணி சைத்தன்யாவின் ஆன்மீகச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

(ந-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**நாம் துறக்க வேண்டிய உலகை நம்முடனேயே தூக்கிக் கொண்டு அலைகின்றோம் அது தான் நமது உடம்பு இந்த உடம்பிற்காகத் தான் அதை நேர்த்தியாக வைத்துக கொண்டு அதற்குக் கொஞ்சம் சுகம் கொடுப்பதற்காகத்தான் நான் அடுத்தவன் மீது வைக்கிறேன் இந்த உடம்பிற்காகத் தான் நான் மற்றவர்களைத் துன்புறுத்துகிறேன், தவறுகள் செய்கிறேன்.**

சுவாமி விவேகானந்தர்

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் முறைகேடு

# விசாரணைகளை ஆரம்பிக்க விசேட குழு!

## ஆளுநர் அசோக ஜெயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை நியமனம் செய்த அரசின் நடைமுறையில் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தொண்டராசிரியர்கள் தெரிவில் ஒழுங்கீனங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எல்.எவ்.சிறிவர்த்தன இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்குகின்றார்.

கடந்த 2000 ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சை மூலம் 193 தொண்டராசிரியர்கள் வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் இத் தெரிவுகள் ரத்துச்செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டில் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 193 பேர் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

2000 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் 2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை.

அத்துடன், 2003 ஆம் ஆண்டு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் 151 பேருக்கு மட்டுமே நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டவர்களில் பலர் தாம் தொண்டராசிரியர்களாக இருந்ததாகப் போலி ஆவணங்களைக் காண்பித்துள்ளனர் என தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனக் குறிப்பிட்டார். (ந,க-60)

## 5 ஆம் தரப் புலமைப் பரீட்சை விடைத்தாள் திருத்தம் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்று முடிந்த 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் வேலைகள் முதற்தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று தொடங்கவுள்ள இவ்விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. (ந-5)

# இணையத்தள சேவை சீராக இன்னும் சில தினங்கள் எடுக்கும்

## ரெலிகொம் நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த இரு நாட்களாக சீர்குலைந்து போயுள்ள இணையத்தள இணைப்புக்களை மீண்டும் சீர்படுத்தி வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு மேலும் சில தினங்கள் எடுக்கும் என இலங்கை ரெலிகொம் நிறுவனம் அறிவித்துள்ளது.

உலகநாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான இணையத்தள சேவைக்கான கேபிள் இணைப்புடன் நேற்றுமுன்தினம் கப்பல் ஒன்று மோதியதால் இணையத்தள சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இதனையடுத்து இணையத்தள சேவைகளை சீர்செய்வதற்கான பணிகள் நேற்று முதல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (ந,ச)

## சீனாவில் நடைபெறவுள்ள

# ஆசிய அரசியல் கட்சி மாநாட்டில் இம்முறை ஜே.வி.பி. பங்கேற்கும்

(கொழும்பு)

சீனாவின் கமயூனிஸ்கட்சியுடன் ஜே.வி.பி. ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் சீனாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதிமுதல் 5 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிய நாடுகளின் அரசியல் கட்சி மாநாட்டில் இம்முறை ஜே.வி.பியும் கலந்துகொள்ளவுள்ளது.

மேற்படி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சீனா செல்லவுள்ள ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் நந்தன குணத்திலக ஆகியோர் அந்நாட்டின் கம்யூனிஸ்கட்சியுடன் ஒப்பந்தத்தை செய்துகொள்வார்கள் எனக் கூறப்படுகிறது.

சீனாவில் இதுவரைகாலமும் நடைபெற்றுவந்த ஆசிய நாடுகளின் அரசியல்கட்சி மாநாட்டில் இலங்கையில் இருந்து கம்யூனிஸ் கட்சியே பங்குபற்றிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந,க)

# கல்வித்துறையில் 7ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை!

(கொழும்பு)

ஏழாயிரம் பட்டதாரிகளுக்கு கல்வித்துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும், இவர்களில் 5 ஆயிரம் பேர் பாடசாலை நூலகர்சேவையில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள 2000 பேரில் 1500 பேரை 2 ஆம் தெரிவுப் பாடங்களைக் கற்பிக்கவும், ஏனையோர் ஆசிரியர்களாகவும் பணிக்கு அமர்த்தப்படுவர் எனவும் மேலும் தெரிவித்தார். (ந,ப)

## புலமைப்பரிசில்...

ஆம் திகதியையும் கொண்ட சுற்றறிக்கையின் மூன்றாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 2 அம்சங்களுக்கும் மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் வாசகங்களும் சேர்க்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டிற்கு முன்பு பெற்றோர்களின் வருடாந்த வருமான எல்லை 6 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு குறைவான நிலையில் மாணவர் உதவி பெற்றவர்களின் தற்போதைய மாணவர் உதவி வருமான எல்லை 2003 ஜனவரி மாதம் தொடக்கம் 24 ஆயிரம் ரூபா என்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஏற்கனவே மாணவர் உதவி பெறுகின்ற மாணவரின் பெற்றோர்களின் வருமானம் 24 ஆயிரம் ரூபாவரை வருடாந்தம் அதிகரிக்கப்பட்டபோதிலும், அம்மாணவ, மாணவியர்களுக்கும் மாணவர் உதவி வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இம் மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு 2003 ஆம் ஆண்டிற்கு முன்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று தற்போது மாணவர் உதவி பெறாத மாணவர்களுக்கு மாணவர் உதவிபெறும் உரிமை இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## தவறிழைப்போர்...

இதன் பிரகாரம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்து அரசியல் வேலைகளில் ஈடுபட விடுதலைப் புலிகளுக்கு முழுமையான உரிமை இருக்கிறது. ஆனால் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் வேலைகளை செய்வதாகக் கூறி வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்று பல சந்தர்ப்பங்களிலும் பலமுறைப்பாடுகள் எமக்கு கிடைத்திருக்கின்றன.

ஒரு நாட்டினுள் இன்னொரு நாடு இருக்க முடியாததைப் போல, இராணுவமும் பொலிசும் இருக்கமுடியாது. நீதிமன்றமும் நிர்வாகக் கட்டமைப்பும் இருக்கமுடியாது. இவை தவறு என்று கண்டறிந்தபின் தவறிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு உரிமை இருக்கவேண்டும். ஆனால், அந்த உரிமை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இன்னும் இல்லை.

இந்நிலையில், யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு உரிமையுடன் செயற்படுவதற்கான வழிவகைகளை அரசு இன்று ஆராய்ந்து வருகிறது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார். (ம-121)

# வாக்குமூலம் பதிவுசெய்ய மட்டு. நீதிமன்றம் அனுமதி

(மட்டக்களப்பு)

கருணா அணியைச் சேர்ந்த சச்சிமாஸ்டர் உட்பட இரண்டு சிறைக்கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக முதலாம் சந்தேகநபரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்ய குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மட்டக்களப்பு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று மட்டக்களப்பு நீதிவான் எம்.எவ்.எம். அக்மிர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கொலைச் சம்பவத்தின் முதலாவது சந்தேகநபரான மகேந்திரன் புவிதரன் தற்பொழுது மொனராகலைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பிரஸ்தாபநபரை விசாரணை செய்வதற்காக குற்றப்புலனாய்வுத் துறையினர் அறிக்கை ஒன்றை மன்றில் சமர்ப்பித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் வாக்குமூலம் பதிவுசெய்ய அனுமதியளித்துள்ளார்.

இதேவேளை, இரண்டாம் சந்தேகநபரான ரி.அருளம்பலம் மட்டும் நீதிமன்றில் நேற்று ஆஜரானார்.

இவர் மீதான வழக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டது. (ச)

## ஆட்கொணர்வு...

ரணைக்கு எடுக்கப்பட்டது.

முதலாம் எதிர்மனுதாரரும், அக்காலப் பகுதியில் கொடிகாமம் எருவன் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்தவருமான லெப்டினன்ட் கேணல் ரஞ்சன் மகிந்தரட்ணவின் சார்பில் இராணுவ சட்டத்தரணி கப்டன் குறூப் ஆஜராகியிருந்தார். ரஞ்சன் மகிந்தரட்ண சிறுநீரக சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்து இராணுவ சட்டத்தரணி மருத்துவச் சான்றிதழை சமர்ப்பித்து தவணை கோரியதையடுத்து வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி எம். ரெமிடியாஸ் ஆஜராகியிருந்தார். (த)

## வரவு - செலவுத்திட்ட...

7 சதவீதமாகக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

எண்ணெய் விலை அதிகரிக்குமானால் பல துறைகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். அரசாங்கம் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டமொன்றை அமுல்செய்யத் தயாராகி வருகிறது.

இதேவேளை அடுத்த சில வாரங்களில் மின்சாரம், பஸ் மற்றும் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். மின்சாரக் கட்டணம் 5 சதவீதத்தால் அதிகரிக்கும். இந்த அதிகரிப்பு வீட்டுப் பாவனையாளர்களுக்கு மாத்திரமே இருக்கும்.

ரயில் கட்டணங்கள் 7 தொடக்கம் 8 வீதத்தால் அதிகரிக்கப்படும். பஸ் கட்டணத்தை அதிகரிப்பது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-121)

## கண்காணிப்புக்...

புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளரை கேட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, முல்லைத்தீவு சாலைக் கடற்பரப்பில் கடந்த வாரம் ஆயுதங்கள் இறக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக பிரதிப் பணிப்பாளர் பவானந்தன் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெவ்டேயை கொழும்பில் சந்தித்து பேசியதாகவும் தெரியவருகிறது. (ந-க)

## மட்டக்களப்பில்...

யோகத்தினாலேயே இராணுவச் சிப்பாய் காயமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் சுமேதபெரேரா தெரிவித்தார்.

காயமடைந்த சிப்பாய் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை காயங்கேணிப் பகுதியில் கடந்த 4 நாட்களுக்குள் இடம்பெற்ற மூன்றாவது சம்பவம் இதுவாகும். (ச)

## ஆயுதக் குழுக்களுக்கு...

யிலேயே நடைபெற்றுள்ளது.

வழமைபோன்று தாம் சோதனைச் சாவடியில் பதிந்த விபரங்களை வைத்தே தாக்குதல்காரர்கள் நடவடிக்கையில் இறங்கியிருந்தனர் என்பது சந்தேகத்திற்கிடமானது என்று குயிலின்பன் சாட்சியத்தில் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் காயங்கேணி சோதனைச் சாவடியில் இருந்தவர்கள் தப்பிச் சென்றுகொண்டிருந்த பெண் போராளியை பார்த்து கைகளைத் தட்டி குதூகலித்ததுடன் பரிகாசமும் செய்துள்ளனர்.

இத் தாக்குதல் மிகவும் திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்றுள்ளது. சோதனைச் சாவடிகளுக்கு இடையே கிளைமோர் கண்ணியைப் புதைப்பதற்கும், மறைந்திருந்து தாக்குவதற்கும் இலங்கை இராணுவத்தினரே உதவியுள்ளனர். கிளைமோரை ஏற்பாடு செய்வதற்கு அனுமதித்தது மட்டுமன்றி புலி உறுப்பினர்களின் பெயர்களையும் அறிவித்து உதவியுள்ளனர்.

இலங்கை இராணுவம் இப்படியான தீய நோக்கத்துடன் நடந்தது இது முதற்தடவையல்ல. தமிழரின் போராட்டத்திற்கு எதிரான சக்திகளுடன் இணைந்து சமாதான நடவடிக்கைக்கு ஊறு விளைவித்து போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கும் முரணாக நடந்ததும் இது முதற் தடவையல்ல.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பிரமாணம் 1.8ஐ அமுல் செய்வது இலங்கை அரசாங்கத்தின் அசிரத்தைப்போக்குபற்றி நாம் ஏற்கனவே மிகுந்த கவலையை தெரிவித்துள்ளோம். இந்த பிரமாணத்தை மீறி இலங்கை இராணுவம் ஆயுதக் குழுக்களுக்கு ஊக்கம்கொடுப்பது போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும்செயல் என்பதுடன் இயல்பு நிலைக்கு அச்சுறுத்தலாகும் என்பது அறிந்ததே.

இச் செயல்களுக்கு பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காதுவிடின் நெருக்கடி சூழ்நிலைக்கு வழிவகுக்கும் என்பதே எமது அச்சமாகும்.

எமது பேச்சுக்கள் பலவற்றில் நாம் கூறியிருப்பது போன்று இராணுவப் புலனாய்வு ஆட்களே சில ஆயுதக் குழுக்களுடன் இணைந்து இத்தகைய அழிவுச் செயலகளில் ஈடுபடுகின்றனர். இலங்கை இராணுவத்தினர் மீதும், இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் மீதும் வாகரைச் சம்பவம் தொடர்பாக தாம் சுமத்தும் நேரடியான குற்றச்சாட்டு தொடர்பில், போர்நிறுத்த கண்காணிப்பு குழு இலங்கை அரசாங்கத்திடம் பேசுவதற்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கும் என்றும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.